Postal Reg.No. GDP-39/2017-2019

بسم اللہ الرحمن الرحیم    نحمدہ ونصلّی علی رسولہ الکریم    وعلی عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 2

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 8

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

25 ஜமாதியுல் அவ்வல் 1438 ஹிஜ்ரி கமரி    23 தப்லீக் 1396 ஹிஜ்ரி ஷம்ஸி

23 பிப்ரவரி 2017

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**இந்த நபி நம் மீது இட்டுக்கட்டி பொய் கூறியிருந்தால் நாம் அவரை நமது வலக்கையால் பிடித்திருப்போம். பிறகு அவரது உயிர் நாடியைத் துண்டித்திருப்போம்.**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இட்டுக்கட்டி பொய் கூறினால் அவர்கள் அழிக்கப்படுவார்கள். மேலும் எல்லா பணிகளும் சீர்குலைந்து விடும். ஆனால் வேறு எவராவது இட்டுக்கட்டி பொய் கூறினால் இறைவன் அவர் மீது வெறுப்படைய மாட்டான். மாறாக, அவரை நேசிக்கின்றான் என்ற இவ்விஷயம் ஓர் ஆதாரமாக இருக்க முடியுமா?**

**இறைவன் தனது கருணையுடனும் பரிவுடனும் என்னுடன் நடந்து கொண்டான். எதுவரையென்றால் இந்த நீண்ட காலத்தின் ஒவ்வொரு நாளும் எனக்காக முன்னேற்றத்தின் நாட்களாக இருந்தன. என்னை அழிப்பதற்காக என் மீது தொடுக்கப்பட்ட ஒவ்வொரு வழக்கிலும் எதிரிகளை இறைவன் இழிவடையச் செய்தான். இதற்கு இணையாக இந்த அளவு காலக்கட்டமும் இறை உதவியும் ஆதரவும் உங்களுக்கும் கிடைத்திருக்கின்றதென்றால் அதை எடுத்துக் காட்டுங்கள்.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

**18 –வது அடையாளம்:** இறைவனின் இந்த கூற்றாகும்.

وَلَوْ تَقَوَّلَ عَلَيْنَا بَعْضَ الْاَقَاوِيْلِ ○ لَاَخَذْنَا مِنْهُ بِالْيَمِيْنِ ○ ثُمَّ لَقَطَعْنَا مِنْهُ الْوَتِيْنَ ○

அதாவது, இந்த நபி என் மீது இட்டுக்கட்டி பொய் கூறியிருந்தால் நாம் அவரை நமது வலக்கையால் பிடித்திருப்போம். பிறகு அவரது உயிர் நாடியைத் துண்டித்திருப்போம். இந்த வசனம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பாக இறங்கியது. ஆனால், இதன் கருத்து எல்லாருக்கும் பொருந்தக் கூடியதாகும். முழு குர்ஆனிலும் கூட இதுபோன்ற சொற்றொடர் காணப்படு -கின்றன. வெளிப்படையாகப் பார்க்கும்போது பெரும்பாலான ஏவல், விலக்கல் கட்டளைகள் பெருமானார் (ஸல்) அவர்களை விளித்தே கூறப்பட்டிருக்கின்றன. ஆனால், அந்த கட்டளைகள் மற்றவர்களுக்கும் கூறப்பட்டவையாக இருக்கின்றன அல்லது அந்த கட்டளைகள் மற்றவர்களுக்காக மட்டுமே கூறப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, فَلَا تَقُلْ لَّهُمَآ اُفٍّ وَّلَا تَنْهَرْهُمَا وَقُلْ لَّهُمَا قَوْلًا كَرِيْمًا உங்களது பெற்றோர்களிடம் வெறுப்பைக் காட்டும் விதத்திலுள்ள சொற்களைச் சொல்லாதீர். அவர்களது மேன்மையைக் கருத்தில் கொள்ளாமல் இருக்கின்ற வகையிலுள்ள விஷயங்களை அவர்களிடம் கூற வேண்டாம் என்ற வசனம் இருக்கின்றது. இந்த வசனம் பெருமானார் (ஸல்) அவர்களை நோக்கியே கூறப்பட்டிருக்கின்றது. ஆனால், உண்மையில் அந்த வசனம் பெருமானார் (ஸல்) அவர்களின் உம்மத்தைச் சார்ந்தவர்களை நோக்கியே கூறப்பட்டிருக்கின்றது. ஏனென்றால், பெருமானார் (ஸல்) அவர்களின் சிறு வயதிலேயே அன்னாரது தந்தையாரும் தாயாரும் வஃபாத் ஆகி விட்டனர். மேலும், இந்த கட்டளையில் ஓர் இரகசியமும் இருக்கின்றது. அதாவது, நீர் உமது பெற்றோர்களுக்கு கண்ணியமளிப்பீராக! ஒவ்வொரு பேச்சின்போதும் அவர்களது மேன்மை மிக்க தகுதியைக் கருத்தில் கொள்வீராக என்று பெருமானார் (ஸல்) அவர்களை நோக்கியே கூறப்பட்டிருக்கும்போது பிறகு மற்றவர்கள் தங்களது பெற்றோர் -களுக்கு எந்த அளவு மதிப்பளிக்க வேண்டும்? என்பதை இந்த வசனத்தில் இருந்து அறிவுள்ள ஒவ்வொருவராலும் புரிந்து கொள்ள முடியும்.

இதன் பக்கமே இந்த இன்னொரு வசனம் சுட்டிக் காட்டுகின்றது. وَقَضٰى رَبُّكَ اَلَّا تَعْبُدُوْٓا اِلَّآ اِيَّاهُ وَبِالْوَالِدَيْنِ اِحْسَانًا உமது இறைவன், நீ அவனுக்கு மட்டுமே அடியானாக இருக்க வேண்டும் என்றும், பெற்றோர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்றும் விரும்புகின்றான். இவ்வசனத்தில் சிலை வணக்கம் செய்கின்ற சிலை வணங்கிகளுக்கு சிலை ஒன்றுமே அல்ல. சிலைகள் உங்களுக்கு எந்த நன்மையையும் செய்ய முடியாது. அவை உங்களை படைக்கவில்லை. உங்களது சிறு வயதில் உங்களை பராமரிக்கக்கூடியவையாக அவை இருக்கவில்லை என்பது புரிய வைக்கப்பட்டிருக்கின்றது. இறைவன் அவனுக்கு இணையாக வேறு ஒருவரையும் வணங்குவதை ஆகுமானதாக ஆக்கியிருந்தால் நீங்கள் பெற்றோர்களையும் வணங்குங்கள் என்று அவன் உங்களுக்கு கட்டளையிட்டிருப்பான். ஏனென்றால், அவர்களும் கூட உருவகமாக (படைத்து வளர்த்துக் காக்கின்ற) இறைவனாக இருக்கின்றார்கள். ஒரு நபர் இயல்பாகவே எதுவரையென்றால் பறவைகளும் விலங்குகளும் கூட தங்களது சந்ததிகளை அவை சிறு வயதில் இருக்கும்போது அவை வீணாவதிலிருந்தும் பாதுகாக்கின்றன. எனவே, இறைவனின் படைத்து வளர்த்துக் காக்கின்ற தன்மைக்குப் பிறகு பெற்றோர்களிடம் கூட ஒருவகையான இறைத்தன்மை இருக்கின்றது. அந்த இறைத்தன்மையின் உணர்வு கூட மேலான இறைவனிடம் இருந்தே அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

ஆட்சேபனைக்கு பதில் கூறும் விதமாக இவற்றை கூறிய பிறகு நாம் அசல் வசனத்தின் பக்கம் திரும்பியவாறு இதை கூறுகின்றோம். பெருமானார் (ஸல்) அவர்கள் தொடர்பாக அவர் நம்மீது சிலவற்றை இட்டுக்கட்டி பொய் கூறி இருந்தால் நாம் அவரை அழித்திருப்போம் என்று கூறியிருப்பதற்கு இறைவன் பெருமானார் (ஸல்) அவர்கள் தொடர்பாக மட்டுமே இந்த தனது தன்மான உணர்வை வெளிப்படுத்தியுள்ளான். அதாவது, பெருமானார் (ஸல்) அவர்கள் இட்டுக்கட்டி பொய் கூறுபவர்களாக இருந்திருந்தால் மட்டுமே இறைவன் அவர்களை அழித்திருப்பான். ஆனால், மற்றவர்கள் தொடர்பாக இந்த தன்மான உணர்வு அவனுக்கு இல்லை என்பது பொருள் அல்ல. மற்றவர்கள் எவ்வாறெல்லாம் இறைவன் மீது இட்டுக்காட்டி பொய் கூறினாலும், பொய்யான இல்ஹாம்களை உருவாக்கி அவற்றை இறைவனுடன் தொடர்புபடுத்தி அவனிடமிருந்து அவை வந்தன என்று கூறினாலும் அவற்றை குறித்து இறைவனின் தன்மான உணர்வு பொங்கி எழாது என்ற எண்ணம் எவ்வாறு அறிவுக்குப் புறம்பானதாக இருக்கின்றதோ அவ்வாறே அது இறைவனின் எல்லா வேதங்களுக்கு எதிரானதாகவும் இருக்கின்றது. எந்த நபர் இறைவன் மீது இட்டுக்கட்டி பொய் கூறுவாரோ, பொய்யாக தான் நபி என்று வாதம் புரிவாரோ அவர் அழிக்கப்படுவார் என்ற சொற்கள் இப்போது வரை தவ்ராத்தில் ஆதாரமாக இருக்கின்றன.

இதை தவிர தொன்மையிலிருந்தே இஸ்லாத்தின் ஆலிம்கள் لَوْ تَقَوَّلَ عَلَيْنَا என்ற இந்த வசனத்தை கிறித்தவர்களுக்கும் யூதர்களுக்கும் முன்னால் பெருமானார் (ஸல்) அவர்களின் உண்மைக்கு ஆதாரமாக எடுத்து வைத்து வந்துள்ளனர். எந்தவொரு விஷயமும் பொதுவானதாக இருக்காத வரையில்

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

முஸ்லிம்கள் மீது தொழுகை கடமை என்பது நம்மில் எவருக்கு தான் தெரியாது? திருக்குர்ஆனில் பல இடங்களில் தொழுகையின் முக்கியத்துவம் குறித்து பல்வேறு சான்றுகள் மூலம் விளக்கி அதன் பக்கம் கவனமூட்டப்பட்டுள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: தொழுகை இறை வணக்கத்தின் சத்து ஆகும். பிறகு பிள்ளைகளை தொழுகைகளை பேண வைப்பதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழிகாட்டல் வழங்கியிருந்தார்கள். பெற்றோரும் கூட தொழுகையை பேணுபவர்களாக இல்லை என்றால் சிறுவர்களிடம் எப்படி கூற முடியும்? சிறுவர்கள் தமது கூட்டங்களில் இந்த ஹதீஸைக் கேட்டாலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய வழிகாட்டலைக் கேட்டாலும் கூட வீட்டில் தமது தந்தையரை தொழுகையைப் பேணுபவராகக் காணவில்லை என்றால் அவர்களிடம் என்ன தாக்கம் ஏற்படும்?

**இக்காலத்தில் அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உண்மைப் பேரன்பரை அனுப்பினான். அவர்கள் நமக்கு இறை வணக்கங்கள் மற்றும் தொழுகைகளைப் பற்றிய சரியான அறிவை உருவாக்குவதற்கான வழிகாட்டலை வழங்கினார்கள்.**

சந்தேகமின்றி ஓர் உண்மையான நம்பிக்கை கொண்டவர் மீது தொழுகை கடமையாகும். அதில் அவர் சுயமே கவனம் செலுத்த வேண்டும். ஆனால், ஜமாஅத்தில் ஓர் அமைப்பும் நிலைநாட்டப்பட்டுள்ளது. அந்த அமைப்பும் கூட கவனமூட்ட வேண்டும். அதன் உண்மையை தெளிவுபடுத்திக் கொண்டே இருக்க வேண்டும். நான் அதிகமான குத்பாக்களில் இவ்வாறு கவனமூட்டிக் கொண்டிருக்கின்றேன். ஒரு கருத்தை விளக்கும்போது ஏதாவது ஒரு வகையில் தொழுகையில் பக்கம் கவனமூட்டப்படுகிறது. ஆனால் அதனை மேற்கொண்டு பரப்புவதும் அதன் பக்கம் கவனமூட்டுவதும் முரப்பிகள் மற்றும் ஜமாஅத் அமைப்பின் பணியாகும். ஒவ்வொரு ஜமாஅத் நபருக்கும் தொழுகையின் முக்கியத்துவத்தின் தூதை மீண்டும் மீண்டும் கொண்டு சேர்க்க வேண்டும்.

**நாம் நமது தொழுகைகளைப் பேணியவாறு அதிலிருந்து ஆன்மீக இன்பத்தைப் பெறும்போதுதான் உண்மையில் நாம் அஹ்மதியாக இருப்பதன் உரிமையை செலுத்த முடியும்.**

தமது ஆசை நிறைவேறி விட்டாலோ, பிரச்சனை அகன்று விட்டாலோ பிறகு பெரும்பாலாரின் நிலை எப்படி இருக்கின்றது என்றால், அவர்களின் தொழுகைகளில் பணிவான துஆக்கள் செய்வதில் சோம்பல் உருவாகி விடுகிறது.

---

ஒரு நம்பிக்கை கொண்டவருக்கு சமூகத்தின் பொதுவான நிலைமைகள் கூட வேதனையை உருவாக்கக் கூடியதாக இருக்க வேண்டும். இந்த வேதனையின் நிலை ஏற்பட்டால் பிறகு அந்த வேதனையால் துஆவும் வெளிப்படுகின்றது. உதாரணமாக, பாகிஸ்தானில் ஜமாஅத்தின் நிலைமைகள் மிகவும் மோசமாக உள்ளது. எல்லா பக்கமிருந்தும் ஜமாஅத் மக்களுக்கு எதிராக எதிர்ப்பின் அம்புகள் வீசப்படுகின்றன. காழ்ப்புணர்ச்சியும் வெறுப்பும் வெளிப்படுத்தப்படுகின்றது. முல்லாக்கள் மீதுள்ள பயத்தால் அல்லது அவர்களின் பேச்சினால் ஏற்பட்ட தவறான எண்ணத்தால் ஜமாஅத்துடன் பழைய தொடர்பை வைத்திருந்த ஜமாஅத்தைச் சாராத மக்களும் கூட ஜமாஅத் மீது எதிர்ப்பில் முன்னேறிக் கொண்டிருக்கின்றனர். பொதுவாகக் கூட பாருங்கள். இந்த அநீதி எல்லையைத் தொட்டு விட்டது. பாகிஸ்தானில் இந்த நிலைமையில் ஒவ்வோர் அஹ்மதியும் கண்டிப்பாக இன்பமும் ரசனையும் கொண்ட தொழுகையைத் தொழ வேண்டும். அத்துடன் பள்ளிவாயிலை நிரப்பவும் முயற்சி செய்ய வேண்டும்.

நமது கவனத்தைக் கூட அல்லாஹ்வின் பக்கம் திருப்பாத அத்தகைய குத்பா கேட்பதில் பயன் என்ன? நமது அடிப்படைக் கடமையின் பக்கம் நமக்கு கவனம் இல்லை. அதுவே மிகவும் அவசியமாகும். நான் ஏற்கனவே கூறியது போன்று நான் ஒவ்வொரு இரண்டாவது அல்லது மூன்றாவது குத்பாவிலும் தொழுகை மற்றும் ஜமாஅத்தான தொழுகை அல்லது இபாதத்தின் பக்கம் கவனமூட்டுகிறேன். அதன் தாக்கமே இல்லை என்றால் பிறகு எண்ணிக்கையின் கட்டடத்தை நிரப்புவதில் எந்தப் பயனும் இல்லை.

பாகிஸ்தானில் அஹ்மதிகளின் நிலையை விளக்கினேன். அதற்குப் பிறகும் அல்லாஹ்வின் பக்கம் கவனம் இல்லை என்றால் பிறகு எப்போது ஏற்படும்? நாம் அல்லாஹ்வை சோதிக்க விரும்புகிறோமா? நவூதுபில்லாஹ். நாங்கள் அப்படியேதான் இருப்போம். எங்கள் நிலைமைகளை மாற்றுவது அல்லாஹ்வின் வேலை என்கிறோமோ? எனவே, பாகிஸ்தானில் ஒவ்வோர் அஹ்மதியும் இதன் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமாகும். வெற்றிகள் உறங்குவதால் கிடைக்காது. வெற்றிகள் எல்லையில் குதிரையைக் கட்டுவதாலும், படைகளை நிறுவுவதாலும்தான் கிடைக்கும்.

---

சில ஜமாஅத்துகளில் தொழுகையில் நல்ல வருகை இருக்கிறது. இருந்தும் எவராவது ஒருவருக்கு ஒரு தொழுகை வீணாகவே செய்கிறது. ஒன்று அல்லது இரண்டு தொழுகைகளை தொழாதவர்கள் பலர் உள்ளனர். இதற்கு ஒரு காரணம் நான் கூறியதுபோன்று ஜமாஅத் அமைப்பு அவர்களுக்கு கவனமூட்டுவதில்லை. ஜமாஅத் அமைப்பிற்கு மற்ற முன்னுரிமைகள் உள்ளன.

இன்பத்தையும் ரசனையையும் தொழுகையில் உருவாக்கக்கூடிய தொழுகையாளிகள் உருவானால் பொருளாதார அமைப்பு தன்னாலேயே சரியாகி விடும். ஏனெனில் தக்வாவின் தரம் உயர்ந்து கொண்டே செல்லும்போது பொருள் தியாகத்தின் பக்கம் கவனம் ஏற்படுகிறது. அது மட்டுமல்லாமல் உமூரே ஆமா, கஸாவின் விவகாரங்கள் மட்டும் அதனால் தீர்க்கப்படும் என்பது மட்டுமல்ல. மாறாக, அதன் காரணமாக மற்ற துறைகளும் செயற்துடிப்புள்ளதாகி விடும்.

அல்லாஹ் தன் மீது ஈமான் கொண்டதற்குப் பிறகு தொழுகையை நிலைநாட்டுமாறு கட்டளையிட்டுள்ளான். எனவே, ஒவ்வோர் அஹ்மதி ஆணும் பெண்ணும் தமது தொழுகையைப் பேணுவதன் பக்கமும் குறிப்பாக ஜமாஅத்தாக தொழுவதன் பக்கமும் பக்கமும் மிகவும் கவனம் செலுத்த வேண்டும்.

---

அல்லாஹ்வின் மீது முழுமையான உறுதிப்பாடு இருந்தால் இந்த சோம்பல் எப்படி ஏற்பட முடியும்? எனவே, இன்று உலகின் நிலைமைகளின் தீய தாக்கத்திலிருந்து உங்களையும் உங்கள் சந்ததிகளையும் காப்பாற்றுவதற்காக அல்லாஹ்விடம் களங்கமற்ற முறையில் குனிவது அவசியமாகும். குனிவதற்கான மிகச் சிறந்த வழியையும் அல்லாஹ்வும் அவனது தூதரும் மற்றும் காலத்தின் இமாம் ஆகிய ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களும் கூறியுள்ளார்கள். அது, நாம் நமது தொழுகையை நிறைவேற்றுவதிலும் இறைவணக்கத்திலும் கவனம் செலுத்த வேண்டும் என்பதேயாகும்.

---

திருக்குர்ஆன், நபிமொழிகள், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வழிகாட்டல்களின் ஒளியில் தொழுகையின் முக்கியத்துவம் மற்றும் குறிப்பாக ஆண்களுக்கு ஜமாஅத்தாக தொழுகையை நிலைநாட்டுவதன் பக்கம் குறிப்பாக கவனமூட்டுவதற்காக ஜமாஅத்திலுள்ள நபர்களுக்கும் ஜமாஅத் அமைப்பிற்கும் ஹுஸூர் அவர்கள் வலியுறுத்திக் கூறியுள்ள வழிகாட்டல்கள்.

# சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் மார்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**

**20 ஜனவரி 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **சுலஹ்** மாதம் **20 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ. الرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. اِيَّاكَ نَعْبُدُ

وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ.

முஸ்லிம்கள் மீது தொழுகை கடமை என்பது நம்மில் எவருக்கு தான் தெரியாது? திருக்குர்ஆனில் பல இடங்களில் தொழுகையின் முக்கியத்துவம் குறித்து பல்வேறு சான்றுகள் மூலம் விளக்கி அதன் பக்கம் கவனமூட்டப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: தொழுகை இறை வணக்கத்தின் சத்து ஆகும். (சுனன் திர்மிதி கிதாபுத் த஼வாத் பாபு மாஜாஅ ஃபீ ஃபழ்லித் துஆ ஹதீஸ் 3371) இன்னும் சொல்வதாயின், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த அளவுக்கு கூறினார்கள் என்றால், தொழுகைகளை விட்டு விடுவது மனிதனை நிராகரிப்பிற்கும், இணை வைப்பிற்கும் அருகில் கொண்டு செல்கிறது என்று அவர்கள் கூறினார்கள். (சஹீஹ் முஸ்லிம் கிதாபுல் ஈமான். பாபு பயானி இத்லாக்கி இஸ்மில் குஃப்ரி அலா மன் தரகஸ் ஸலாத்தி ஹதீஸ் 149)

பின்னர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தொழுகை –யின் முக்கியத்துவத்தைப் பற்றி கூறும்போது எடுத்துரைத்தார்கள்: கியாமத் நாளில் எல்லா –வற்றிற்கும் முதலில் கணக்கு கேட்கப்படும் ஒரு விஷயம் தொழுகையாகும். இந்த கணக்கு சரியாக இருக்கும் என்றால் அவர் வெற்றி பெற்றார். ஈடேற்றம் அடைந்தார். அது அல்லாமல் அவர் நஷ்டமடைந்தார்; பாதிப்படைந்தார். (சுனன் திர்மிதி அப்வாபுஸ் ஸலாத்தி பாபு மாஜாஅ அன் அவ்வலு மா யுஹாஸபு ஹதீஸ் 413)

பிறகு பிள்ளைகளை தொழுகைகளை பேண வைப்பதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழிகாட்டல்களை வழங்கியிருந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘‘ஏழு வயதை அடையும்போது சிறுவர்களுக்கு தொழுகைகளை அறிவுறுத்துங்கள். பத்து வயதை அடையும்போது தொழுகைகளை பேண வைப்பதற்காக சிறிது கடுமை காட்ட வேண்டியது வந்தால் கடுமை காட்டுங்கள். (சுனன் அபீ தாவூது கிதாபுஸ் ஸலாத்தி பாபு மதா யுஃமருல் குலாமு பிஸ்ஸலாத்தி ஹதீஸ் 495) பெற்றோரும் கூட தொழுகையை பேணுபவர்களாக இல்லை என்றால் சிறுவர்களிடம் எப்படி கூற முடியும்? சிறுவர்கள் தமது கூட்டங்களில் இந்த ஹதீஸைக் கேட்டாலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய வழிகாட்டலைக் கேட்டாலும் கூட வீட்டில் தமது தந்தையரை தொழுகையைப் பேணுபவராகக் காணவில்லை என்றால் அவர்களிடம் என்ன தாக்கம் ஏற்படும்? நிச்சயமாக அத்தகைய தந்தையரை உடைய குழந்தைகள் இந்தக் கட்டளைக்கு எந்த முக்கியத்துவமும் இல்லை என்றே கருதுவார்கள். இன்னும் சொல்வதென்றால், இந்தக் கட்டளையின் முக்கியத்துவத்தை அலட்சியம் செய்வதுடன் ஒவ்வோர் இஸ்லாமிய கட்டளையின் முக்கியத்துவமும் அந்த சிறுவர்களின் உள்ளத்தில் இருந்து அழிந்து விடும்.

அத்தகையோர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வழிகாட்டலுக்கேற்ப தாமே நஷ்டம் அடைபவர்களில் சேருவதுடன் தமது சந்ததிகளையும் கூட நஷ்டமடைபவர்களில் இணைப்பவர்களாக இருக்கின்றனர். உலகியல் விருப்பங்களை நிறைவேற்றுவதற்காக, உலகியல் முன்னேற்றத் –திற்காக தாய் தந்தையர் கவலையை வெளிப்படுத்து –கின்றனர். ஆனால், அசலான கவலைக்குரிய விஷயத்தில் அவர்கள் பொருட்படுத்தப்படுவதில்லை. பிறகு ஓர் உண்மையான நம்பிக்கை கொண்டவருக்கு அவரது ஆன்மீக அழுக்குகள் விலக தொழுகை மட்டும் கடமையில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதற்கு ஓர் உதாரணத்தைக் கூறினார்கள்: ஒருவரின் வீட்டிற்கு முன் ஓர் ஆறு ஓடுகிறது. அதில் அவர் ஒரு நாளைக்கு ஐந்து முறை குளிக்கிறார் என்றால் அவரது உடலில் ஏதாவது அழுக்கு இருக்கும் என்று நினைக்கிறீர்களா? சஹாபா (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நிச்சயமாக எந்த அழுக்கும் இருக்காது என்று கூறினர். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அதுபோன்றே ஐவேளை தொழுகைகள் மூலம் அல்லாஹ் பாவங்களை மன்னிக்கிறான்; பலவீனங்களை அகற்றுகிறான். (சஹீஹ் புகாரி கிதாபு மவாக்கீத்துஸ்ஸலாத்தி பாபு ஃபழ்லிஸ் ஸலாத்தில் கம்ஸ் கஃப்பாரத்துன் ஹதீஸ் 528)

ஐந்து தொழுகைகளைத் தொழுபவரின் ஆன்மாவில் எந்த அழுக்கும் இருக்காது. எனவே, இதுவே தொழுகையின் முக்கியத்துவம் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓர் அழகிய உதாரணம் மூலமாக விளக்கினார்கள். நான் ஏற்கனவே கூறியது போன்று இதில் தொழுவதற்கு மட்டும் கட்டளையிடப் –படவில்லை. மாறாக, உண்மையான நம்பிக்கை –யாளரான ஆணுக்கு ஆன்மாவின் இந்த அழுக்கை களைவதற்காக அவர் செய்ய வேண்டியது என்ன என்பதை மேலும் அன்னார் தெளிவுபடுத்தினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எந்த மனிதர் வீட்டில் உளூ செய்து அல்லாஹ்வின் வீட்டிற்கு அதாவது பள்ளிவாயிலுக்கு சென்றாரோ அங்கு ஃபர்ளான தொழுகையை நிறைவேற்றினாரோ அவர் பள்ளிவாயிலுக்குச் செல்லும் போது எவ்வளவு அடியெடுது வைத்தாரோ அவற்றுள் ஒவ்வோர் அடியிலும் ஒரு பாவம் மன்னிக்கப்படும். அவர் எடுத்து வைக்கும் இரண்டாவது அடியின் காரணமாக ஓர் அந்தஸ்து உயர்த்தப்படும். அதாவது ஒவ்வோர் அடியும் அவருக்கு நற்பயன் தரக்கூடியது. (சஹீஹ் முஸ்லிம் கிதாபுல் மஸாஜிதி வ மவாழியிஸ் ஸலாத்தி பாபுல் மஷா இலஸ்ஸலாத்தி ஹதீஸ் 1406)

பிறகு இன்னொரு சந்தர்ப்பத்தில் ஜமாஅத்தான தொழுகை பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் பாவத்தை மன்னிக்கக்கூடிய, அந்தஸ்தை உயர்த்தக்கூடிய ஒரு விஷயத்தைப் பற்றி நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா? சஹாபா ரிழ்வானுல்லாஹி அலைஹிம் எப்போதுமே அல்லாஹ்வை திருப்திப்படுத்த முயல்வதற்கு நமக்கு எப்போது வாய்ப்பு கிடைக்கும்? என்றும், அவனை திருப்திப்படுத்தும் வழியைக் கற்பதற்கு ஏங்குபவர் –களாகவும் இருந்தார்கள். அவனது நெருக்கத்தைப் பெறவும், தமது பாவத்தில் இருந்து விலகவும் ஏங்குபவர்களாக இருந்தார்கள். அவர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! கண்டிப்பாக கூறுங்கள் என்று கூறினர்.

பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உள்ளம் விரும்பாத நிலையிலும் நன்றாக உளூச் செய்து, தூரத்திலிருந்து பள்ளிவாயிலுக்கு நடந்து வந்து ஒரு தொழுகைக்குப் பிறகு அடுத்த தொழுகையை எதிர்பார்த்திருப்பது ஆகியவை பாவத்திலிருந்து தூர விலக்குகின்றன என்று கூறினார்கள். தொடர்ந்து, இவ்வளவு மட்டும் இல்லை. இது ஒரு வகை எல்லைப் பாதுகாப்பு ஆகும் என்று கூறினார்கள். (சஹீஹ் முஸ்லிம் கிதாபுத் தஹாரதி பாபு ஃபழ்லி இஸ்பாஹில் உளூயி அலல் மகாரிஹ ஹதீஸ் 475) அதாவது நாட்டின் எல்லையில் படைகளை நிறுத்தி வைப்பதற்கு சமமாகும். எவ்வாறு நாட்டைப் பாதுகாக்க எல்லையில் படைகளை நிறுத்தி வைக்கிறார்களோ அதைப் போன்றதாகும். எல்லைகளில் இராணுவம் ஏன் நிறுத்தப்படுகிறது? அதற்கான காரணம் நான் கூறியதுபோன்று நாட்டைப் பாதுகாப்பதற்காகவும், எதிரியின் தாக்குதலிலிருந்து காப்பாற்றப்படுவதற் –காகவும், தாக்குதல் தொடுக்கப்பட்டால் உடனே அதனை எதிர்க்க ஆயத்தமாவதற்காகவும் இது செய்யப்படுகிறது. எனவே, ஒரு நம்பிக்கையாளருக்கு எல்லாவற்றிற்கும் முதல் ஆபத்தாகவும், அதிலிருந்து தப்பிப்பதற்காக படைகளை நிறுத்தவும் தேவைப்படும் ஓர் ஆபத்து ஷய்த்தானுடையதாகும். உலக ஆசைகள் என்னும் ஆபத்தாகும். இதனை ஷய்த்தான் உள்ளத்தில் உருவாக்குகிறான். அதன் மூலம் ஷய்த்தான் தாக்குதல் தொடுக்கிறான். அதிலிருந்து தப்பிப்பதற்கு ஜமாஅத்தான தொழுகை என்பது பாதுகாப்புப் படைக்கான முகாம் ஆகும். இது ஷய்த்தானின் தாக்குதலிலிருந்து பாதுகாக்கும். பாவத்திலிருந்து மனிதன் தப்பிப்பான். நன்மையின் பக்கம் கவனம் உருவாகும். அதேபோன்று ஜமாஅத் ஆன தொழுகை தனியான தொழுகையை விட 27 மடங்கு அதிக நன்மை தருவதாகும் என்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (சஹீஹ் புகாரி கிதாபுல் அஸான் பாபு ஃபஸ்லிஸ்ஸலாத்தில் ஜமாஅத்தி ஹதீஸ் 645)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஜமாஅத்துடன் தொழும் தொழுகையின் முக்கியத்துவத்தை விளக்கியவாறு ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: ஜமாஅத்தான தொழுகையில் இறைவன் பெரும் பலன் வைத்துள்ளான். அதன் நோக்கம் ஒருமைப்பாடு உருவாகுவதாகும். பிறகு அந்த ஒருமைப்பாட்டை செயலளவில் கொண்டு வருவதற்கு வழிகாட்டலும் கவனமூட்டலும் உள்ளது. ஒருவொருக்கொருவரின் பாதங்கள் நேராக இருக்க வேண்டும். ஓரணியில் நேராக நிற்க வேண்டும். அதற்காக குதிகால்கள் சமமாக, நேராக வைக்கப்படுகிறது. ஸஃப் (வரிசை) நேராக இருக்க வேண்டும் என்ற வழிகாட்டல் உள்ளது. இதன் பொருள் என்னவென்றால், ஒரேயொரு மனிதரின் கட்டளையை நீங்கள் கடைபிடிக்க வேண்டும். எல்லாரும் ஓரணியாகி விட்டால் ஒரே மனிதனைப் போன்று ஆகி விடுவீர்கள். பிறகு அதில் ஓர் ஆற்றல் உருவாகி விடும். ஒருவரது ஒளிகள் மற்றவருக் –குள்ளும் ஊடுருவ முடியும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: சுயநலம் உருவாக்குகிற பிரிவினைகள் இல்லாமல் போவதற்காக செல்வந்தரும், ஏழையும் ஆகிய எல்லாரும் ஓரணியில் திரள்கிறார்கள்.

சில விஷயங்கள் சிலரின் மூளையில் காணப்படு –கின்றன. சுயநலம் காணப்படுகிறது. அதனை ஜமாஅத்தான தொழுகை அழிக்கிறது.

அன்னார் கூறுகின்றார்கள்: நினைவில் கொள்ளுங்கள். மனிதனிடம் இந்த ஆற்றல் இருக்கிறது. அவர் மற்றவரின் ஒளிகளை ஈர்க்கிறார். (மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 247-248; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) ஒருவரிடம் அதிகமாக நன்மையின் தாக்கம் இருக்கும். நன்மையில் உயரிய அந்தஸ்தில் இருக்கிறார் என்றால், மற்றவரும் அதன் தாக்கத்தில் வருவார். அதன் தாக்கத்தை ஏற்பார். நன்மையின் தாக்கத்தை ஏற்பதற்கு ஜமாஅத்தான தொழுகை பயன்படுகிறது. எனவே, ஜமாஅத்தான தொழுகையில் ஓர் ஒருமைப்பாடு வெளிப்படுகிறது. இதனை இறைவன் உம்மத்திடம் உருவாக்க விரும்புகிறான். அதே வேளையில் மற்றவரின் நன்மையின் தாக்கமும் ஏற்படுகிறது. எனவே ஒரே ஸஃபில் அதிகம் நன்மை

செய்பவரும், ஆன்மீக ரீதியில் வளர்ச்சியடைந்தவரும், அதேபோன்று பலவீனமானவர்களும் நிற்கும்போது பலவீனமானவர் மீது நன்மை செய்வோரின் தாக்கம் ஏற்படும். அவர்களிடமும் நன்மையின் தாக்கமும், அதில் வளர்ச்சி பெறவும் ஆன்மீகத்தில் முன்னேற்றம் பெறுவதற்கான ஆற்றலும் அதிகமாகிறது. இந்த ஒருமைப்பாடு உருவாகும்போது ஆன்மீக மேம்பாடு ஏற்படும்போது ஷய்த்தானிய சக்தி பலவீனமடையும். இக்காலத்தில் அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உண்மைப் பேரன்பரை அனுப்பினான். அவர்கள் நமக்கு இறை வணக்கங்கள் மற்றும் தொழுகைகளைப் பற்றிய சரியான அறிவை உருவாக்குவதற்கான வழிகாட்டலை வழங்கினார்கள்.

நாம் ஒருபுறம், நமது ஆன்மீக நிலையின் முன்னேற்றத்தையும் அதனை நிலைநாட்டுவதற்–காகவும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உண்மையான அடியாரும் வாக்களிக்கப்பட்ட மஹ்தியாகவும் மஸீஹாகவும் வந்தவரை ஏற்றதாக வாதித்துக் கொண்டு மற்றொருபுறம் நமது செயல்களில் குறிப்பாக அடிப்படையான இஸ்லாமிய கட்டளையைப் பேணுவதில் பலவீனம் இருக்கும் என்றால், அடிப்படை கடமையில் பலவீனம் இருக்கும் என்றால் நமது படைப்பின் நோக்கத்தினை நிறைவேற்றுவதிலேயே பலவீனம் இருக்கும் என்றால், அல்லாஹ் ஏற்படுத்தியுள்ள குறைந்தபட்ச தரத்தைக் கூட நிறைவேற்றுவதில் நமக்கு பலவீனம் இருக்கும் என்றால், பிறகு நமது ஆன்மீக நிலையில் முன்னேற்றம் மற்றும் அல்லாஹ்வின் கட்டளையின்படி நடப்பதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய கட்டளைக்கு செவிசாய்த்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டுள்ளோம் என்று நாம் எவ்வாறு வாதிக்க முடியும்?

நான் ஏற்கனவே கூறியதுபோன்று திருக்குர்ஆனில் பல்வேறு இடங்களில் ஐந்து தொழுகைகளின் முக்கியத்துவம் கூறப்பட்டுள்ளது. நான் கூறியது போன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உடைய வழிகாட்டல்கள் மிகவும் தெளிவானவையாகும். தொழுகை ஓர் அஹ்மதிக்கு கடமையாக இருக்கிறது. அத்துடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஜமாஅத்தான தொழுகையின் முக்கியத்துவம் பற்றி கூறுகின்றார்கள்: அறிவுள்ள ஒவ்வொரு பருவ வயதை அடைந்தவருக்கும் ஜமாஅத்துடன் தொழுவது கடமையாகும். ஆனால், இதன் பக்கம் முழுமையான கவனம் இல்லை என்பதைப் பார்க்கிறோம். பலவீனம் உள்ளது. சந்தேகமின்றி ஓர் உண்மையான நம்பிக்கை கொண்டவர் மீது தொழுகை கடமையாகும். அதில் அவர் சுயமே கவனம் செலுத்த வேண்டும். ஆனால், ஜமாஅத்தில் ஓர் அமைப்பும் நிலைநாட்டப்பட்டுள்ளது. அந்த அமைப்பும் கூட கவனமூட்ட வேண்டும். அதன் உண்மையை தெளிவுபடுத்திக் கொண்டே இருக்க வேண்டும். நான் அதிகமான குத்பாக்களில் இவ்வாறு கவனமூட்டிக் கொண்டிருக்கின்றேன். ஒரு கருத்தை விளக்கும்போது ஏதாவது ஒரு வகையில் தொழுகையில் பக்கம் கவனமூட்டப்படுகிறது. ஆனால் அதனை மேற்கொண்டு பரப்புவதும் கவனமூட்டுவதும் முரப்பிகள் மற்றும் ஜமாஅத் அமைப்பின் பணியாகும். ஒவ்வொரு ஜமாஅத் நபருக்கும் தொழுகையின் முக்கியத்துவத்தின் தூதை மீண்டும் மீண்டும் கொண்டு சேர்க்க வேண்டும். உண்மையில் நாம் அஹ்மதியாக இருப்பதன் உரிமையை நாம் நமது தொழுகையைப் பேணியவாறு அதிலிருந்து ஆன்மீக இன்பத்தைப் பெறும்போதுதான் செலுத்த முடியும். இந்த ஆன்மீக ரசனையும் இன்பமும் கிடைக்கத் தொடங்கி விட்டால் தொழுகையைப் பேணுவதில் சுயமே கவனம் ஏற்பட்டு விடும். நான் இதன் பக்கம் கவனமூட்டியவாறு கூறினேன். ஒவ்வோர் அஹ்மதியும் முதலில் தாம் தொழுகையின் கவனம் செலுத்த வேண்டிய தேவை உள்ளது. தாம் எவ்வாறு தொழ வேண்டும்? உள்ளத்தில் ஓர் இன்பத்தைப் பெற்றுத் தரும் தொழுகையை எவ்வாறு பெறுவது? ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொழுகையைப் பேணுவது குறித்து கவனமூட்டியவாறு இந்த இன்பத்தை எவ்வாறு பெறலாம்? என்பதை இவ்வாறு விளக்குகிறார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் பார்க்கிறேன். அன்னார் உதாரணம் தருகிறார்கள். ஒரு குடிகாரர் போதைப் பழக்கமுள்ள மனிதன் தனக்கு முழுமையான இன்பம் கிடைக்கவில்லை என்றால் குடித்துக் கொண்டே இருக்கிறார். போதையைப் பெறுவதற்காக குடித்துக் கொண்டே இருக்கிறார். ஒருவகை போதை வரும் வரை அவ்வாறு செய்கிறார். ஓர் அறிவுள்ள மனிதனும், புத்திசாலியும் அதிலிருந்து பயனடைய முடியும். அதாவது, ஓர் அறிவுள்ள மனிதனாக இருந்தால் இந்த உதாரணத்திலிருந்து பயனடைய முடியும். எவ்வாறு பயனடையலாம்? தமது ஆன்மீகத்தை விரைவுபடுத்துவதற்காக தொழுகையில் தொடர்ந்து நிலைத்திருங்கள். அதை முறையாகப் பேணுங்கள். ஒருபோதும் விட்டு விடாதீர்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒருவர் இன்பம் கிடைக்கும் வரை தொழுது கொண்டே இருக்க வேண்டும். ஒரு குடிகாரரின் உள்ளத்தில் ஓர் இன்பம் இருப்பது போன்று அதனைப் பெறுவது அவரது இலக்காக இருப்பது போன்று தொழுகையின் நிலையும் இருக்கின்றது. குடிகாரர் குடிக்கும்போது அவர் மனதில் இந்த வரம்பை நாம் அடைய வேண்டும்; இவ்வளவு இன்பமடைய வேண்டும் என்று ஓர் இலக்கை நிர்ணயித்துக் கொள்கிறார். பிறகு தமது போதையின் அந்த வரம்பைத் தொட்டு விடுகிறார் என்றால் ஒரு நம்பிக்கையாளரும் ஆன்மீகத்தில் தமக்கு தாமே தொழுகைக்காக வரம்பை அடையும் பொருட்டு தமது இலக்கை நிர்ணயிக்க வேண்டும். இவ்வாறு மீண்டும் மீண்டும் முயற்சி செய்தால் நிரந்தரத் தன்மையுடன் முயற்சி செய்தால் அந்த இன்பத்தைப் பெற முடியும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: மனதிலுள்ள எல்லா ஆற்றல்களின் கவனமும் தொழுகையில் இந்த இன்பத்தைப் பெற வேண்டும் என்பதில் இருக்க வேண்டும். ஒரு தொழுகையாளி தொழும்போது மனதில் இதனை கருத்தில் கொள்ள வேண்டும். தனது எல்லா கவனமும், தொழுகையின் இன்பத்தை நாம் அடைய வேண்டும் என்பதற்காக தன்னிடம் உள்ள அனைத்து சக்திகள் அனைத்தையும் பயன்படுத்த வேண்டும். அதற்காக எண்ணத்தின் ஆற்றலை அதிகரிப்பது அவசியமாகும். எண்ணத்தின் ஆற்றல் இருந்தால் பிறகு நிரந்தரத் தன்மையின் காரணமாக இதனைப் பெற முடியும்.

பிறகு கூறுகின்றார்கள்: கலப்பற்ற தூய எழுச்சியுடன் குறைந்தபட்சம் இந்த போதைப் பழக்கமுடையவரின் நிர்பந்த நிலையும் அமைதியற்ற நிலையும் போன்று துஆ உருவாகி ஒரு ரசனை உருவாகி விட்டால் பிறகு நான் உண்மையாகவே கூறுகிறேன். நிச்சயமாக நிச்சயமாக அந்த இன்பம் கிடைத்து விடும். பிறகு ஒரு வேதனையும் கவலையும் நிம்மதியின்மையும் எனக்கு தொழுகையில் இன்பம் ஏற்பட வேண்டும் என்று வரும்போது, இதனை தொழும்போது மீண்டும் மீண்டும் அவர் அல்லாஹ்வின் முன் வெளிப்படுத்துகிறார் என்றால் பிறகு நிச்சயமாக உங்களுக்கு அந்த இன்பம் கிடைக்கும்; ரசனை கிடைக்கும் என்று ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 9 பக்கம் 7,8; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) நிரந்தரத் தன்மையுடன் தொழுகையில் இன்பத்தைப் பெறுவதற்காக செய்யப்படும் முயற்சி இறுதியில் ஒரு நேரத்தில் உள்ளத்தைக் கரைத்து அந்த இன்பத்தைத் தந்து விடுகிறது.

அன்னார் இதன் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள்: அல்லாஹ் கூறுகிறான். தொழுகை, மானக்கேடான செயலிலிருந்தும் தீமைகளிலிருந்தும் காப்பாற்றுகிறது. ஆனால், நாம் பார்க்கிறோம். மக்கள் கேள்வியும் கேட்கிறார்கள். தொழுது கொண்டிருக்கும் நிலையிலும் கூட மக்கள் தீய செயலை செய்கிறார்கள். இதற்குப் பதிலாக அன்னார், அவர்கள் உண்மையுடனும் உயிருடனும் தொழுவதில்லை என்று கூறுகின்றார்கள். மாறாக, வழக்கம் மற்றும் சம்பிரதாயம் என்ற முறையில் விழுந்து எழுகிறார்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 9 பக்கம் 8; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) எனவே, நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். அல்லாஹ் கூறுகிறான். தொழுகை தீமையிலிருந்து காப்பாற்றுகிறது. நிச்சயமாக இது உண்மையாகும். அல்லாஹ்வின் சொல் பொய்யாக முடியாது. எவரிடம் தொழும் நிலையிலும் கூட தீமைகள் நிலை நிற்குமோ அவர்களின் தொழுகைகள் வெறும் வெளித் தொழுகையாகவே இருக்கின்றது. அவர்கள் அதன் ஆன்மாவைப் புரியவில்லை. எனவே, இது மிகவும் கவலை கொள்ளத்தக்க இடமாகும். நாம் ஒவ்வொருவரும் நம்மை ஆய்வு செய்ய வேண்டும். நமக்கு இன்பமும் ரசனையும் கிடைக்கிறது என்றால் அல்லது எமக்கு இன்பதும் ரசனையும் கிடைத்திட வேண்டும் என்ற உறுதியான விருப்பம் இருந்தால் பிறகு நம்மில் ஒருவர் தொழுகையை முறையாகப் பேணாமல் எவ்வாறிருக்க முடியும்? ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு வேளையில் இந்த


**திருக்குர்ஆனிலிருந்து**

நீங்கள், உங்கள் இறைவனிடமிருந்து
இறங்கக்கூடிய மன்னிப்பின்பாலும்,
வானங்கள், பூமி ஆகியவற்றின் மதிப்பைக்
கொண்டதும் இறையச்சமுடையோருக்கு
ஏற்படுத்தப்பட்டுள்ளதுமான
சொர்க்கத்தின்பாலும்
விரைந்து செல்லுங்கள். (3:134)

**ஜலாலுத்தீன்**
ஸயீம், மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், தூத்துக்குடி.
Ph : +91 98409 17179

**O.A.N. DOORS & STEELS**
**O.A.N. டோர்ஸ் & ஸ்டீல்ஸ்**

*All Types of wodden Doors, Skin Doors, Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals*

Ambai Road, (Opp. Karuna Clinic),
Kulavanikarpuram, Tirunelveli - 627 005
O.A. NIJAM - 99947 571772
V.A. SAIT - 99430 30230

**திருக்குர்ஆனிலிருந்து**

(மக்களை) நன்மையின் பக்கம்
அழைக்கவும் நல்லவற்றைப்
போதித்து தீமையைத் தடுக்கவும்
செய்யும் ஒரு கூட்டம் (எப்போதும்)
உங்களிடையே இருந்து வர
வேண்டும். இவர்களே வெற்றி
பெறுவோர். (3:105)

**A. பஷீர் அஹ்மது**
வக்ஃபே ஜதீது செயலர், மேலப்பாளையம். Ph : +91 98437 22215

இன்பத்தின் அனுபவம் ஏற்படுகிறது; ஏற்பட்டிருக்கலாம். பிரச்சனைகள் ஏற்பட்டால் நம்மில் பலர் தொழுகைகளில் அதிகமாக அழுவதைப் பார்க்கிறோம். நடுங்குகிறார்கள். நடக்கும்போது கூட அல்லாஹ்விடம் துஆ செய்கிறார்கள். அதன் பக்கம் கவனம் இருக்கிறது. இதனால் இறை வணக்கத்திலும் கவனம் ஏற்படுகிறது. ஏதாவது ஒரு வகையில் உள்ளத்தில் எண்ணம் உருவாகிறது. இந்நிலையில் வேதனையின் நிலையில் நிரந்தரமாக துஆவில் மூழ்கி விடுகின்றனர். ஆனால், தமது ஆசை நிறைவேறி விட்டலோ, பிரச்சனை அகன்று விட்டாலோ பிறகு பெரும்பாலாரின் நிலை எப்படி இருக்கின்றது என்றால், அவர்களின் தொழுகைகளில் பணிவான துஆக்களை செய்வதில் சோம்பல் உருவாகி விடுகிறது.

எனவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: தொடர்ந்த முயற்சியுடன் நம்மிடம் ஒரு இலக்கை வைத்துக் கொள்ள வேண்டும். நிலைமைகள் நன்றாக இருந்தாலும், கெட்டதாக இருந்தாலும், நெருக்கடியிலும் சரி, வசதியிலும் சரி இந்த போதையின் நிலையை உருவாக்கக்கூடிய இன்பத்தைப் பெற வேண்டும். வெறும் சொந்த சூழ்நிலைகள் மட்டுமல்லாமல் ஒரு நம்பிக்கை –யாளருக்கு சமூகத்தின் பொதுவான நிலைமைகள் கூட வேதனையை உருவாக்கக் கூடியதாக இருக்க வேண்டும். இந்த வேதனையின் நிலை ஏற்பட்டால் பிறகு அந்த வேதனையால் துஆவும் வெளிப்படுகின்றது.

உதாரணமாக, பாகிஸ்தானில் ஜமாஅத்தின் நிலைமைகள் மிகவும் மோசமாக உள்ளது. எல்லா பக்கமிருந்தும் ஜமாஅத் மக்களுக்கு எதிராக எதிர்ப்பின் அம்புகள் வீசப்படுகின்றன. காழ்ப்புணர்ச்சி –யும் வெறுப்பும் வெளிப்படுத்தப்படுகின்றது. முல்லாக்கள் மீதுள்ள பயத்தால் அல்லது அவர்களின் பேச்சினால் ஏற்பட்ட தவறான எண்ணத்தால் ஜமாஅத்துடன் பழைய தொடர்பை வைத்திருந்த ஜமாஅத்தைச் சாராத மக்களும் கூட ஜமாஅத் மீது எதிர்ப்பில் முன்னேறிக் கொண்டிருக்கின்றனர். பொதுவாகக் கூட பாருங்கள். இந்த அநீதி எல்லையைத் தொட்டு விட்டது. பாகிஸ்தானில் இந்த நிலைமையில் ஒவ்வோர் அஹ்மதியும் கண்டிப்பாக இன்பமும் ரசனையும் கொண்ட தொழுகையைத் தொழ வேண்டும். அதே வேளையில் பள்ளிவாயிலை நிரப்பவும் முயற்சி செய்ய வேண்டும்.

கடந்த நாட்களில் பாகிஸ்தானின் குத்தாமுல் அஹ்மதிய்யா சார்பாக மஜ்லிஸே ஷூராவின் முடிவுகளை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமான ஒரு அறிக்கை வந்தது பற்றி அதில் எழுதப்பட்டிருந்தது. எண்ணிக்கையின் அடிப்படையில் நாங்கள் தர்பிய்யத் முடிவுகளில் இந்த வெற்றியைப் பெற்றுள்ளோம் என்று எழுதப்பட்டிருந்தது. மிகவும் நல்லது. முன்னேற்றத்தின் பக்கம் அடியெடுத்து வைத்துள்ளார்கள். இந்த தர்பிய்யத் விவகாங்களின் பல்வேறு விஷயங்களில் ஒரு விஷயம் எனது குத்பாவைக் கேட்கும் விஷயத்தில் இத்தனை ஆயிரம் குத்தாமிடம் கவனம் ஏற்பட்டுள்ளது என்பதாகும். ஆனால் கவலைப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால், ஜமாஅத்துடன் தொழுவதன் பழக்கம் உள்ளோர் ஜுமுஆ குத்பா கேட்போரில் சுமார் மூன்றில் ஒரு பகுதியினரே இருந்தனர் அல்லது அதனை விட சிறிது அதிகமாக இருந்தனர். அதேபோன்று, தொழும் பழக்கமுள்ள குத்தாமின் எண்ணிக்கையும் கூட குத்பா கேட்போரின் எண்ணிக்கையை விட கணிசமாக குறைந்திருக்கின்றது. நமது கவனத்தை கூட அல்லாஹ்வின் பக்கம் திருப்பாத அத்தகைய குத்பா கேட்பதில் பயன் என்ன? நமது அடிப்படைக் கடமையின் பக்கம் நமக்கு கவனம் இல்லை. அதுவே மிகவும் அவசியமாகும்.

நான் ஏற்கனவே கூறியது போன்று நான் ஒவ்வொரு இரண்டாவது அல்லது மூன்றாவது குத்பாவிலும் தொழுகை மற்றும் ஜமாஅத்தான தொழுகை அல்லது இறை வணக்கத்தின் பக்கம் கவனமூட்டுகிறேன். அதன் தாக்கமே இல்லை என்றால் பிறகு எண்ணிக்கையின் கட்டத்தை நிரப்புவதில் எந்தப் பயனும் இல்லை. பாகிஸ்தானில் அஹ்மதிகளின் நிலையை விளக்கினேன். அதற்குப் பிறகும் அல்லாஹ்வின் பக்கம் கவனம் இல்லை என்றால் பிறகு எப்போது ஏற்படும்? நாம் அல்லாஹ்வை சோதிக்க விரும்புகிறோமா? நவூதுபில்லாஹ். நாங்கள் அப்படியேதான் இருப்போம். எங்கள் நிலைமைகளை மாற்றுவது அல்லாஹ்வின் வேலை என்கிறோமோ? இதனை நாம் வெளிப்படுத்தினோம் என்றால் பிறகு அல்லாஹ்வை புகார் கூற நமக்கு எந்த உரிமையும் இல்லை? அல்லாஹ் நீங்கள் விரும்புவதை செய்யுங்கள் அல்லது செய்யாமல் இருங்கள். எனக்குரிய உரிமையைச் செய்யுங்கள் அல்லது செய்யாமல் இருங்கள். ஏனெனில் நீங்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹை ஏற்றுக் கொண்டு விட்டீர்கள். எனவே, உங்களுக்கு வெற்றியைத் தந்து விடுவேன் என்று எங்கும் ஒருபோதும் கூறவில்லை. வெற்றியைப் பெறுவதற்காக தமது நிலைமையை அல்லாஹ்வின் திருப்திக்கேற்ப அமைப்பது அவசியமாகும்.

குத்தாம் அறிக்கையை பற்றிக் குறிப்பிட்டேன். குத்தாமுல் அஹ்மதிய்யாவில் மட்டும்தான் அப்படி பலவீனமுள்ளது என்று அதற்கு ஒருபோதும் பொருளல்ல. அன்ஸாரின் நிலையும் இதுதான். எனவே, பாகிஸ்தானில் ஒவ்வோர் அஹ்மதியும் இதன் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமாகும். வெற்றிகள் உறங்குவதால் கிடைக்காது. வெற்றிகள் எல்லையில் குதிரையைக் கட்டுவதாலும், படைகளை நிறுவுவதாலும்தான் கிடைக்கும். பாகிஸ்தானிலிருந்து வெளியேறி வெளிநாடு வந்தவர்கள் அல்லது பொதுவாக எல்லா ஜமாஅத்துகளிலும் இந்த முன்னேற்றமடைந்த நாடுகளிலும், பிற உலகிலும் அவர்களின் நிலை இதுதான். வெளியே வந்ததில் பெரும் தொழுகையாளிகளாகி விட்டனர் என்று நாம் கூற இயலாது. எல்லா இடங்களிலும் தொழுகை –யாளிகளே உள்ளனர் என்று கூற இயலாது. ஜமாஅத்துகளை ஆய்வு செய்யுங்கள். பல பலவீனங்கள் தொழுகை விவகாரத்தில் தென்படும்.

ஒவ்வொரு விஷயத்திலும் நீதியுடன் எல்லா அமைப்புகளும் ஆய்வு செய்தால் ஒவ்வொரு நாட்டிலும் விளைவுகள் தன்னாலேயே தென்படும். ஆனால் பாகிஸ்தானை விட்டு வெளியில் வந்தவர்கள் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டும். அல்லாஹ் அவர்களுக்கு அருள் செய்துள்ளான். அதற்கு நன்றியும் செலுத்த வேண்டும். அதனை எவ்வாறு வெளிப்படுத்துவது? சில ஜமாஅத்துகளில் தொழுகையில் நல்ல வருகை இருக்கிறது. இருந்தும் எவராவது ஒருவருக்கு ஒரு தொழுகை வீணாகவே செய்கிறது. ஒன்று அல்லது இரண்டு தொழுகைகளை தொழாதவர்கள் பலர் உள்ளனர். இதற்கு ஒரு காரணம் நான் கூறியது போன்று ஜமாஅத் அமைப்பு அவர்களுக்கு கவனமூட்டுவதில்லை. ஜமாஅத் அமைப்பிற்கு மற்ற முன்னுரிமைகள் உள்ளன. எனது குத்பாக்களை ஒவ்வொருவரும் கேட்பதில்லை. நூற்றுக்கு நூறு கேட்கிறார்கள் என்று கூறினாலும் அதுவும் தவறாகும். கேட்டாலும் கூட நிரந்தரமாக நினைவூட்டுவதும் ஜமாஅத் அமைப்பின் பணியாகும். இதற்காகவே அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. தர்பிய்யத்தின் பக்கம் கவனம் இருக்க வேண்டும் என்பதற்காக கடந்த நாட்களில் இங்குள்ள ஒரு ஜமாஅத்தின் செயற்குழுவின் சந்திப்பு இருந்தது.

அப்போது ஜமாஅத் தலைவர் கூறினார்: நான் தலைவராக ஆக்கப்பட்டதிலிருந்து பொருளாதார அமைப்பின் மீது மிகவும் கவனம் செலுத்தினேன். இப்போது நாங்கள் மிக விரைவாக முன்னேறிக் கொண்டிருக்கிறோம் என்று கூறினார். நான் அவரிடம் கூறினேன். நீங்கள் செய்த இந்த முயற்சி சரிதான். ஆனால் ஒரு நம்பிக்கையாளருக்கு அடிப்படையானதும் ஃபர்ளானதும் தொழுகையாகும். அதற்காக நீங்கள் என்ன முயற்சி செய்தீர்கள்? இது குறித்து மவுனமே இருந்தது. ஃபஜ்ர் மற்றும் இஷா தொழுகை பற்றி நான் கேட்டபோது, ஆய்வு செய்த போது எண்ணிக்கை சற்று அதிகமாகி இருப்பது தெரிய வந்த போதிலும், கணிசமான மேம்பாடு இருந்த போதிலும் ஜமாஅத் அமைப்பின் முயற்சி அதில் எதுவும் இருக்கவில்லை.

இன்பத்தையும் ரசனையையும் தொழுகையில் உருவாக்கக்கூடிய தொழுகையாளிகள் உருவானால் பொருளாதார அமைப்பு தன்னாலேயே சரியாகி விடும். ஏனெனில் தக்வாவின் தரம் உயர்ந்து கொண்டே செல்லும்போது பொருள் தியாகத்தின் பக்கம் கவனம் ஏற்படுகிறது. அது மட்டுமல்லாமல் அதன் மூலமாக உமூரே ஆமா, கஸாவின் விவகாரங்கள் மட்டும் அதனால் தீர்க்கப்படும் என்பது மட்டுமல்ல. மாறாக அத்துடன் மற்ற துறைகளும் செயற்துடிப்புள்ளதாகி விடும். தொழுகையை சரிவர பேணும்போது இவை நடைபெறும். இக்காலத்தில் பாகிஸ்தானில் மட்டுமல்ல, பொதுவாக உலகில் போர் ஆபத்து வேகமாக அதிகமாகிக் கொண்டிருக்கிறது. அரசுகளே அதனை இப்போது வெளிப்படுத்தத் தொடங்கி விட்டன. அதற்காக ஓரளவுக்கு நடவடிக்கையையும் எடுக்கத் தொடங்கி விட்டனர். இந்த நிலையில் அல்லாஹ்வின் அடைக்கலம்தான் காப்பாற்றும். பலர் எழுதுகின்றனர். போர் வந்தால் என்ன நடக்கும்? நாங்கள் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்கின்றனர். அவர்களுக்கு இதுதான் பதிலாகும். இந்த ஆபத்திலிருந்து தப்பிக்க வேண்டும் என்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியதுபோன்று அற்புதங்களை உடைய இறைவனை நேசிக்க வேண்டும். அந்த அன்புக்கு ஒரே வழி நமது தொழுகை மற்றும் இபாதத்துகளை அவனது கட்டளைக்கேற்ப அமைத்தவாறு இன்பம் மற்றும் ரசனையை உருவாக்க முயற்சி செய்ய வேண்டும். பெரும்பாலான மக்கள் இந்த நாடுகளில் வந்து உலகியல் வசதி வாய்ப்புகளை பார்த்து இறைவனை மறந்து விடுகின்றனர். அவர்களின் கருத்தின்படி இந்த சொகுசுகள் எல்லாம் இந்த நாட்டின் முன்னேற்றத்தின் காரணமாக கிடைத்துள்ளது. இம்மக்கள் எவ்வளவு முன்னேற்றம் அடைந்துள்ளார்கள்? இதற்கெல்லாம் இவர்களின் எந்த செயல் காரணமாக உள்ளது? என்ன இபாதத் செய்கிறார்கள்? இருந்தும் முன்னேறத்தான் செய்கிறார்கள் என்று இவர்கள் சிந்திக்கிறார்கள். இன்னும் இவ்வாறும் சிந்திக்கின்றனர். சிலர் இவர்களை விட நாம் மேல்தான். ஐந்து தொழுகைகள் இருந்தாலும் ஐந்து கடமையாக இருந்தாலும் ஒன்றிரண்டாவது தொழத்தானே செய்கிறோம் என்று நினைக்கிறார்கள்.

இறைவனை மறந்தவர்களுக்கு மறுமையில் தண்டனை நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இவர்களின் பின்னால் போகாதீர்கள். நாம் அல்லாஹ்வின் பிடியிலிருந்து தப்பிக்க வேண்டுமானால் நமது தலைமுறைகளையும் காப்பாற்ற வேண்டும் என்றால் இவர்களின் வெளிப்படையான நிலைமைகளைப் பார்க்காதீர்கள். மாறாக, இறைவன் நம்மிடம் விரும்புகிற போதனையின் படி செயல்படுங்கள். அல்லாஹ் தன் மீது ஈமான் கொண்டதற்குப் பிறகு தொழுகையை நிலைநாட்டுமாறு கட்டளையிட்டுள்ளான். எனவே, ஒவ்வோர் அஹ்மதி ஆணும் பெண்ணும் தமது தொழுகையைப் பேணுவதன் பக்கமும் குறிப்பாக ஜமாஅத்தான தொழுகையின் பக்கமும் மிகவும் கவனம் செலுத்த வேண்டும்.

இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொழுகையின் முக்கியத்துவம், தொழும் முறை அதன் தத்துவம் ஆகியவற்றை மிகவும் விளக்கிக் கூறியுள்ளார்கள். அல்லாஹ் தனது அருளை புரிந்தவாறு அன்னாரை ஏற்பதற்கு வாய்ப்பு

வழங்கியுள்ளான். ஆனால் அதற்குப் பிறகும் நாம் நான் கூறியது போன்று அடிப்படை கட்டளையின்படி செயல்படவில்லை என்றால் மற்றவர்களைப் போன்றே ஓரிரு தொழுகையை போதுமானதாக்கிக் கொண்டால், அஹ்மதி அல்லாதவர் பெரும்பாலார் இப்படித்தான் செய்கிறார்கள். அவ்வாறு செய்தால் பைஅத்தால் எந்தப் பயனும் இல்லை. தொழுகை சம்பந்தமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எந்தத் தரத்தில் நம்மைப் பார்க்க விரும்புகிறார்கள்? என்னென்ன முறையில் நமக்கு புரிய வைத்தார்கள்? இது சம்பந்தமாக அன்னாரின் சில வழிகாட்டல்களை எடுத்து வைக்கிறேன்.

ஒரு நம்பிக்கையாளர் லாயிலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவை ஓதி ஏகத்துவத்தை பிரகடனம் செய்கிறார். தவ்ஹீது என்றால் என்ன? இதனை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நன்றாக நினைவில் கொள்ளுங்கள். மீண்டும் நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ் அல்லாதவற்றின் பக்கம் குனிவது இறைவன் முன் தொடர்பை முறிப்பதாகும். அல்லாஹ்வை விட்டும் தொடர்பை முறிப்பதாகும். அவர்கள் கூறுகின்றார்கள்: தொழுகை மற்றும் ஏகத்துவம் எதுவாக இருப்பினும் தவ்ஹீதை நடைமுறையில் வெளிப்படுத்துவதே தொழுகையாகும். தவ்ஹீதை வாயால் வாதித்து விட்டோம். அதன் செயல் வெளிப்பாட்டின் பெயர் தொழுகையாகும். அவர்கள் கூறுகின்றார்கள்: தொழுகை மற்றும் தவ்ஹீது எதுவாயினும் அதன் செயல் வெளிப்பாடு தொழுகையாகும். இல்லாமை மற்றும் தாழ்மையின் உயிரும், இறைவன் பக்கம் சாய்ந்த உள்ளமும் இல்லையெனில், அந்த தொழுகை பயனற்றதும் பரக்கத் அற்றதும் ஆகும். கேளுங்கள். உத்வூனி அஸ்தஜிப்லகும் – என்னை அழையுங்கள். நான் பதிலளிப்பேன் என்ற வசனத்திற்கு உண்மையான உயிர் தேவையாகும். இந்தக் கவனம் மற்றும் அச்சத்தில் உண்மையின் உயிர் இல்லை என்றால் அதனை விட கிளியின் பேச்சு குறைந்ததல்ல. மல்ஃபூஸாத் தொகுதி 9 பக்கம் 12; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) உண்மையான உயிரை உருவாக்க வேண்டும். கவனத்தையும் அச்சத்தையும் உருவாக்க வேண்டும். அது இல்லையென்றால் பயன் இல்லை. நான் ஏற்கனவே கூறிவிட்டேன். துஆவில் எளிமையும் கவனமும் இருந்தால் பிறகு அல்லாஹ் ஏற்றுக் கொள்கிறான்.

பிறகு அன்னார் இதனை தெளிவுபடுத்தினார்கள். தொழுகையின் பல்வேறு நிலைகளாக ருகூவு, கியாம், ஸஜ்தா இவை அனைத்தும் ஓர் உருக்கத்தின் நிர்பந்தத்தை வெளிப்படுத்துகின்றன. மனிதனின் நிம்மதியின்மையை வெளிப்படுத்துகின்றன. அந்நிலையில் மனிதன் சில வேளை உட்கார்கிறான். சில வேளை எழுகிறான். சில வேளை சிரம் பணிகிறான். இந்த இக்கட்டான நிலையின் வெளிப்பாட்டின் காரணமாக உள்ளத்தில் வெப்பமும் உருக்கமும் உருவாக வேண்டும். ஒவ்வொரு நிலையிலும் ஸஜ்தாவிலும், ருகூவிலும் இன்பமும் ரசனையும் கிடைக்கும்.

பிறகு அடிமையின் அந்தஸ்து, உண்மையான பணிவு, பாவத்தை எரித்து அழித்து விடுகிற தொழுகையைப் பற்றி விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: மனிதனின் ஆன்மா தன்னையே மறந்தவாறு தம்மிடம் ஓர் இயலாமையை உருவாக்கி விடுகிறது. அதாவது அவர் தன்னை ஒன்றுமில்லை என்று கருதுபவராக ஆகி விடுகிறார். இந்நிலை இறைவன் பக்கம் ஒரு நீரூற்று போன்று ஓடுகிறது. பணிவு உருவாகும் போது அது இறைவன் பக்கம் பெருகி ஓடுகிறது. அல்லாஹ் அல்லாதவற்றை விட்டு அவருக்கு ஒரு துண்டிப்பு ஏற்பட்டு விடுகிறது. இந்நிலையில் அவரிடம் இறைவன் மீது அன்பு நிறைகிறது. முயற்சி செய்து இறை அருளைக் கேட்டவாறு அல்லாஹ்வைத் தவிர வேறு ஒவ்வொன்றின் தொடர்பையும் துண்டிக்கிறார். அந்நிலையில் இறைவனின் நேசம் அவரிடம் அதிகரிக்கிறது. இறைவனிடம் அந்த நேசம் அதிகரிக்கும்போது பாவம் எரிந்து அழிந்து விடுகிறது. பிறகு நிரந்தர தொழுகையில் ஓர் இன்பம் உருவாகி விடுகிறது. மல்ஃபூஸாத் தொகுதி 9 பக்கம் 10; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) எனவே, நமது தொழுகை நமக்கு இன்பம் தரவில்லை என்று புகார் கூறுவதற்கும் உள்ளத்தில் எண்ணுவதற்கும் பதிலாக நாம் அல்லாஹ்விடம் சிறப்பான தொடர்பை உருவாக்க முயற்சி செய்ய வேண்டும். நாம் நமது நிலைமைகளை பார்க்க வேண்டும். நாம் விழுந்து எழுகிறோமா? அல்லது தொழுகையின் உரிமையை செலுத்துகிறோமா? என்று பார்க்க வேண்டும்.

பிறகு தொழுகையில் ஒளி மற்றும் இன்பம் பெறும் வழிமுறைகளைப் பற்றி மேலும் விளக்கியவாறு கூறுகின்றார்கள்: தொழுகையை முறையாகப் பேணுவதும், மிகப் பெரிய விஷயமாகும். அதன் மூலம் முதலில் உறுதியான வழக்கமாக அது நிலை நின்று விடுகிறது. அல்லாஹ்வின் பக்கம் திரும்புதலில் எண்ணம் ஏற்படுகிறது. பிறகு சிறிது சிறிதாக ஒரு நேரம் வருகிறது. இவையெல்லாம் வந்து விட்டால் உறுதியான வழக்கம் ஏற்பட்டு விட்டால் மனிதன் அனைத்தையும் துண்டித்து விட்டு தொழுகையில் ஒளியையும் இன்பத்தையும் பெறுகிறார். மல்ஃபூஸாத் தொகுதி 9 பக்கம் 11; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) உலகை விட்டு மனிதன் துண்டித்துக் கொள்கிறான். இறைவனிடம் கவனம் ஏற்படுகிறது. பிறகு தொழுகையில் அந்த இன்பமும் ரசனையும் ஏற்படுகிறது. எனவே, முதலில் தொழுகையை வழக்கமாக்குவது அவசியமாகும். தொழுகையில் பேணுதல் அவசியமாகும். வெளிப்படையான முறையில் தொழுகையில் பலன் தென்பட்டாலும் சரி இல்லை என்றாலும் சரி தொழுகையை பேணுவது நம்மீது கடமையாகும். நான் எல்லா நிலையிலும் அல்லாஹ்விடமே திரும்ப வேண்டும் என்று புரிந்து வழக்கத்தை உருவாக்க வேண்டும். அவனிடமே செல்ல வேண்டியதுள்ளது. தேவைகளை அவனிடமே கேட்க வேண்டும். இந்த நிரந்தரத்தன்மை நம்மிடம் இருந்தால் பிறகு ஒருவேளை வரும். தொழுகைக்கான உரிமையைச் செலுத்தும் நிலையும் நம்மிடம் உருவாகத் தொடங்கி விடும். தொழுகையில் இன்பமும் கிடைக்கத் தொடங்கி விடும். கேட்கும்போது சிலர் இவ்வாறு பதில் தருகிறார்கள். அதாவது, நாங்கள் தொழுவதற்கு முயற்சி செய்கிறோம். ஆனால் சோம்பலாகி விடுகிறது என்கிறார்கள். இந்த பதில் இனி வராது. ஏனெனில் தொழுகையின் முக்கியத்துவம் தெரியாத போது சோம்பல் ஏற்படுகிறது. மல்ஃபூஸாத் தொகுதி 9 பக்கம் 6,7; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) அல்லாஹ் அல்லாதவற்றை மனிதன் மிக முக்கியமானதாக கருதுகிறான். அல்லாஹ்வின் மீது முழுமையான உறுதிப்பாடு இருந்தால் இந்த சோம்பல் எப்படி ஏற்பட முடியும்? எனவே, இன்று உலகின் நிலைமைகளின் தீய தாக்கத்திலிருந்து உங்களையும் உங்கள் சந்ததிகளையும் காப்பாற்றுவதற்காக அல்லாஹ்விடம் களங்கமற்ற முறையில் குனிவது அவசியமாகும். குனிவதற்கான மிகச் சிறந்த வழியையும் அல்லாஹ்வும் அவனது தூதரும் மற்றும் காலத்தின் இமாம் ஆகிய ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் கூறியுள்ளார்கள். அது, நாம் நமது தொழுகையை நிறைவேற்றுவதிலும் இறைவணக்கத்திலும் கவனம் செலுத்த வேண்டும் என்பதேயாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நினைவில் கொள்ளுங்கள். இந்த இயக்கத்தில் இணைவதில் உலகம் நோக்கமாக இருக்கக் கூடாது. மாறாக இறைவனின் திருப்தியே நோக்கமாக இருக்க வேண்டும். ஏனெனில் உலகம் ஏதோ ஒரு வகையில் கடந்து சென்று விடும் இடமாகும்.

ஒரு ஃபார்ஸி கவிதையில் கூறுகின்றார்கள்: இரவு குளிராக இருந்தாலும் சூடாக இருந்தாலும் கழியத்தான் போகிறது. நிலைமைகள் நன்றாக இருந்தாலும் மோசமாக இருந்தாலும் கழியத்தான் போகிறது.

கூறுகின்றார்கள்: உலக நோக்கங்களை முற்றிலும் தனியாக வையுங்கள். அதனை மார்க்கத்துடன் ஒருபோதும் இணைக்காதீர்கள். ஏனெனில் உலகம் அழியக்கூடிய ஒன்றாகும். மார்க்கமும் அதன் பழங்களும் நிலைத்து நிற்பவையாகும். உலகில் வாழ்நாள் மிகவும் குறைவாக உள்ளது. நீங்கள் பார்க்கிறீர்கள். ஒவ்வொரு வினாடியும், ஒவ்வொரு கணமும் ஆயிரக்கணக்கான மரணங்கள் நிகழ்கின்றன. பல்வேறு வகையான அழிவுகளும் நோய்களும் உலகை அழித்துக் கொண்டிருக்கின்றன. சில வேளை காலரா அழிக்கிறது. இப்போது பிளேக் நோய் அழிக்கிறது. அக்காலத்தில் பரவியிருந்தது. எவருக்கு என்ன தெரியும்? எவர் எதுவரை இருப்பார் என்று யாருக்கு என்ன தெரியும்? மரணம் எப்போது வரும் என்று தெரியாதபோது அதனைக் குறித்து கவனமற்றிருப்பது எவ்வளவு மூடத்தனம்? மறுமையை குறித்து கவலைப்படுவது அவசியமாகும். எவர் மறுமையைக் குறித்து கவலைப்படுவாரோ அவர் மீது இறைவன் உலகில் கருணை காட்டுவான். அல்லாஹ் வாக்குறுதி அளித்துள்ளான். மனிதன் முழுமை அடைந்தால் அவருக்கும் மற்றவருக்கும் இடையில் வித்தியாசத்தை ஏற்படுத்தி விடுகிறான்.

எனவே, முதலில் முஃமின் ஆகுங்கள். அது இந்நிலையில் நடக்க முடியும். இறை உணர்வையும் தக்வாவின் அடிப்படையிலும் அமைந்த பைஅத்தின் கலப்பற்ற நோக்கங்களை உலக நோக்கங்களுடன் கலந்து விட வேண்டாம். தொழுகைகளைப் பேணுங்கள். தவ்பா மற்றும் இஸ்திக்ஃபாரில் மூழ்கியிருங்கள். மனித இனத்தின் உரிமைகளைக் காப்பாற்றுங்கள். எவருக்கும் துக்கம் தராதீர்கள். நம்பிக்கையிலும் தூய்மையிலும் முன்னேறுங்கள். அல்லாஹ் எல்லா வகையான அருளும் செய்வான். பெண்களுக்கும் உங்கள் வீடுகளில் போதனை செய்யுங்கள். அவர்கள் தொழுகையை பேணி வரட்டும். அவர்களை புகார் கூறுதல் மற்றும் புறம் பேசுவதிலிருந்து தடுங்கள். தூய்மை, நம்பிக்கை ஆகியவற்றை அவர்களுக்கு கற்றுத் தாருங்கள். புரிய வைப்பது மட்டுமே நமது நிபந்தனையாகும். அதன்படி செயல்படுவது உங்கள் பணியாகும். மல்ஃபூஸாத் தொகுதி 9 பக்கம் 145-146; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) மற்றவருக்கு புரிய வையுங்கள். பெண்களுக்கு புரிய வையுங்கள். பிள்ளைகளுக்கு புரிய வையுங்கள். இதற்கு நீங்கள் சுயமே தூயவராகவும் நம்பிக்கையாளராகவும் இருக்கும் முன்மாதிரியைக் காட்ட வேண்டும்.

பிறகு கூறினார்கள்: ஐவேளை உங்கள் தொழுகையில் துஆ செய்யுங்கள். உங்கள் மொழியிலும் துஆ செய்வது தடுக்கப்படவில்லை. எதுவரை லயிக்கவில்லையோ அதுவரை இன்பம் கிடைப்பதில்லை. குறிப்பான கவனம் பிறக்காமல் கிடைப்பதில்லை. பணிவு இல்லாமல் உள்ளம் லயிக்காது. என்ன ஓதுகிறோம் என்று புரியும்போதுதான் பணிவு ஏற்படும். எனவே, தமது மொழியில் தமது வேண்டுகளை வைப்பதன் மூலம் உருக்கம் ஏற்படும். இதனால் தொழுகையை தமது மொழியிலேயே ஓதலாம் என்று அதற்கு ஒருபோதும் பொருளல்ல. நான் செல்ல வருவது என்னவென்றால், சுன்னத்தான துஆக்கள், திக்ருகளுக்கு பிறகு உங்கள் சொந்த மொழியிலும் துஆ செய்யுங்கள். அது அல்லாமல் தொழுகையின் அந்த சொற்களில் இறைவன் ஒரு பரக்கத்தை வைத்துள்ளான். தொழுகை என்பது துஆவின் பெயரேயாகும். எனவே, அதில் துஆ செய்யுங்கள். அதன் மூலம் உலகம் மற்றும் மறுமையின் ஆபத்துகளிலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள். நல்ல முடிவை எய்துங்கள்.

உங்கள் எல்லா பணிகளும் அவனது விருப்பத்திற்கேற்ப நடக்கட்டுமாக! உங்கள் மனைவி மக்களுக்காகவும் துஆ செய்யுங்கள். நல்ல

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

# காதியானில் நடைபெற்ற 122 -வது ஆண்டு மாநாடு தொடர்பாக சுருக்கமான அறிக்கை

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

11) மதிப்பிற்குரிய சர்தார் சேவா சிங் ஷேக்குவான் அவர்கள் (அகாலிதள் கட்சியைச் சார்ந்த தலைவர் மற்றும் சரோம்னி குர்துவாரா பிரபந்தக் கமிட்டியின் உறுப்பினர்)

இவர்கள் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்திய -வாறு இவ்வாறு கூறினார்கள்: ஒவ்வொரு வருடமும் அஹ்மதிய்யா ஜமாஅத் மாநாட்டை நடத்துகின்றது. இந்த முறையும் மிகுந்த பற்றுடன் நல்ல ஏற்பாடுகளுடன் இந்த மாநாடு நடந்து கொண்டிருக்கின்றது. ஜமாஅத் இந்த நாளில் மட்டும் மார்க்கத் தோற்றுனர்களின் மாநாட்டை நடத்துவதில்லை. மாறாக, அது முழு வருடமும் இதுபோன்ற மாநாடுகளை நடத்தி வருகின்றது. ஹர்மந்திர் (சீக்கியர்களின் வணக்கஸ்தலம்) உடன் எனக்கு இருப்பது போன்ற தொடர்பே ஜமாஅத்துடன் இருந்து வருகின்றது. ஹர்மந்திருக் -கான அடிக்கல்லை ஒரு முஸ்லிம் பெரியவரான மியான் மீர்ஜி அவர்களே வைத்தார்கள். மார்க்கம் அனைவரையும் ஒன்று சேர்க்கின்றது. அஹ்மதிய்யா ஜமாஅத் முழு உலகிலும் அமைதியை ஏற்படுத்தவும் எந்த வகையிலாவது உலகை மூன்றாவது உலகப் போரிலிருந்து காப்பாற்றவும் முயற்சி செய்து வருகின்றது.

மேலும், இந்தோனேஷியாவிலிருந்து ஒரு குறிப்பிட்ட தனி விமானம் மூலமாக அஹ்மதிகள் காதியான் வந்ததையொட்டி தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள்.

12) மதிப்பிற்குரிய ஹர்வந்தர் சிங் அவர்கள் ஆண்டு மாநாட்டிற்கான வாழ்த்துக்களை தெரிவித்தவாறு இவ்வாறு கூறினார்கள்:

முழு உலகிலும் இதுபோன்ற மாநாடுகள் நடந்து கொண்டே இருந்தால் உலகில் நாம் அமைதியை நிலைநாட்ட முடியும். நான் ஏனைய எல்லா மதங்களின் வேதங்களையும் படித்துள்ளேன். எவரும் வெறுப்பை ஏற்படுத்தக்கூடிய விஷயத்தைக் கூறவில்லை. அனைவரும் அன்பு பற்றிய விஷயங் -களையே கூறுகின்றனர். 122 வருடங்களுக்கு முன்னதாக எந்த மாநாட்டை மிர்ஸா சாஹிப் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்களோ அந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் எனக்கு கிடைத்திருக்கின்றது. அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்றால் நாம் அனைவரும் ஒன்றாகி விட வேண்டும்.

இந்த சந்தர்ப்பத்தில் ஹாலந்தில் வசிக்கின்ற சர்தார் பூபீந்தர் சிங் அவர்களும் கபூர்தலாவைச் சார்ந்த சந்த் பாபா திலேர்சிங் அவர்களும் ஜமாஅத் சார்பாக கௌரவிக்கப்பட்டனர். இதற்கு பிறகு மாநாட்டுத் தலைவரின் அனுமதியுடன் மாநாடு நிறைவடைந்தது.

### *28 டிசம்பர் 2016 (புதன்கிழமை)*

**மூன்றாவது நாள் - முதல் அமர்வு**

மாநாட்டின் மூன்றாவது நாளின் முதல் அமர்வு தென்னிந்தியாவிற்கான கூடுதல் நாஸிர் ஆ.்.லாவான மதிப்பிற்குரிய ஷிராஸ் அஹ்மது சாஹிப் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. நஸாரத் இஸ்லாஹோ இர்ஷாத் வ த.்.லீமுல் குர்ஆன் வக்.்.பே ஆர்ஸியின் முஅல்லிமான மதிப்பிற்குரிய ஹா.்.பிஸ் நகீபுல் அமீன் சாஹிப் அவர்கள் சூரா அந்நஹ்லின் 90 முதல் 92 வரையுள்ள வசனங்களாக ஓதி அதன் மொழியாக்கத்தையும் படித்துக் காட்டினார்கள். ஜாமிஆ அஹ்மதிய்யா காதியானின் ஆசிரியரான மதிப்பிற்குரிய ரிஸ்வான் அஹ்மது நாஸிர் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் நான்காவது கலீ.்.பத்துல் மஸீஹ் ரஹிமஹுல்லாஹுத்தஆலா அவர்களின் கவிதையை அழகிய குரலில் பாடினார்கள்.

இந்த அமர்வில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கை (ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் இருந்த அர்ப்பணிக்கும் உணர்வு) என்ற தலைப்பில் நாஸிம் இர்ஷாத் வக்.்.பே ஜதீதான மதிப்பிற்குரிய மவ்லானா சுல்தான் அஹ்மது ஸ.்.பர் சாஹிப் அவர்கள் முதல் சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். அவர்கள், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அளவு கடந்த பேரன்பு, நேசம் மற்றும் நன்றியுணர்வு தொடர்பான ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய மற்றும் ஆன்மாவிற்கு எழுச்சியூட்டக்கூடிய சம்பவங்களை எடுத்துக் கூறினார்கள். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்கள் மீதுள்ள நேசத்தில் முற்றிலும் தன்னை மாய்த்துக் கொண்டார்கள் என்று அவர்கள் தமது சொற்பொழிவில் குறிப்பிட்டார்கள்.

இந்த அமர்வின் இரண்டாவது சொற்பொழிவை “அஹ்மதிய்யா ஜமாஅத்தும் திருக்குர்ஆன் தொண்டும்” என்ற தலைப்பில் மதிப்பிற்குரிய மவ்லானா அதாவுல் முஜீப் சாஹிப் லோன் (துணை நாஸிர் நஸ்ரோ இஷாஅத், காதியான்) அவர்கள் நிகழ்த்தினார்கள். அவர்கள் இறுதிக் காலத்தில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள அவல நிலை, திருக்குர்ஆனை விட்டு முகந்திருப்பிச் சென்று அதனை அவர்கள் கை விட்டு விட்டனர் என்பதை எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக மார்க்கம் உயிர்ப்பிக்கப்பட்டது பற்றியும் எடுத்துக் கூறினார்கள். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மூலமாக திருக்குர்ஆனுக்கு செய்யப்பட்டு வரும் மகத்தான தொண்டுகளைப் பற்றி குறிப்பிட்டவாறு இன்று ஐந்தாவது கலீ.்.பத்துல் மஸீஹ் அவர்களின் இந்த அருளுக்குரிய காலக்கட்டத்திலும் கூட மின்னல் வேகத்தில் இந்தப் பணிகள் நடந்து வருவது அனைவருக்கும் வெளிப்படையாகத் தெரிகின்ற ஒரு விஷயமாகும் என்று அவர்கள் கூறினார்கள். மேலும், இதன் மூலமாக உலக சமுதாயங்களுக்கு அமைதி மற்றும் நேர்வழிக்கான போதனை தொடர்பாக எடுத்துக் கூறப்பட்டு வருவதையும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இதற்குப் பிறகு ஹோஷ்யார்பூரைச் சார்ந்த பிஜேபி துணைத் தலைவரும் இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் துணைத் தலைவருமான கண்ணியத்திற் -குரிய விருந்தினர் மதிப்பிற்குரிய ஒய்னாஸ் ராய் கன்னா அவர்கள் தமது தாக்கங்களை வெளிப் -படுத்தியவாறு உரை நிகழ்த்தினார்கள். அவர்கள் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டதற்காக விருந்தினர்களுக்கு நன்றி தெரிவித்தவாறு தமது வாழ்த்துக்களையும் தெரிவித்தார்கள். மேலும், அவர்கள் தமது உரையில் பரஸ்பரம் ஒருவர் மற்றவருக்கு இடையிலுள்ள சகோதரத்துவம், அன்பு, அமைதியுடனும் சாந்தியுடனும் எல்லாரும் ஒன்று சேர்ந்து முன்னேறுவது ஆகியவற்றிற்கான பயிற்சிக் கூடமாக இந்த மாநாடு இருக்கின்றது என்று கூறினார்கள். மார்க்கம் ஓர் உண்மையான மனிதனை உருவாக்குவதற்காகவே தோன்றியது என்று அவர்கள் கூறினார்கள். தனது சொற்பொழிவின் இறுதியில் அவர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைவரான ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீ.்.பத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களிடம் அடுத்த வருடம் காதியான் ஆண்டு மாநாடு நடைபெறும் சமயத்தில் ஹுஸூர் அவர்கள் காதியானுக்கும் ஷோஷ்யார்பூருக்கும் வருகை தர வேண்டும் என்றும் வேண்டினார்கள்.

இதற்கு பிறகு ராஜ்ய சபாவின் பாராளுமன்ற உறுப்பினரான காதியானைச் சார்ந்த சர்தார் பிரதாப் சிங் பாஜ்வா அவர்கள் தனது தாக்கங்களை எடுத்துரைத்தார்கள். அவர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத் செய்து வருகின்ற தொண்டுகளைப் புகழ்ந்து பாராட்டினார்கள். மேலும், அவர்கள் தமது உரையில் நான் பல வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளேன். அங்கு அஹ்மதிய்யா ஜமாஅத்திலுள்ள சகோதரர்கள் தமது நல்ல முன்மாதிரியின் மூலம் தங்களுக் -கென்று ஒரு தனி அடையாளத்தை ஏற்படுத்தி இருக்கின்றார்கள். மேலும், அவர்கள் தமது நேர்மை மற்றும் நற்பண்புகளின் காரணமாக எல்லா இடங்களிலும் புகழ்வதற்குத் தகுதி உடையவர்களாக உள்ளனர். மேலும் படைப்பினங்களுக்கு தொண்டு செய்கின்ற பணிகளிலும் கூட இவர்கள் எப்போதும் முன்னேறி வருகின்றனர் என்று கூறினார்கள்.

அஹ்மதிய்யத்தே உண்மை இஸ்லாம் (அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது இழைக்கப்படும் அநீதிகளும் ஜமாஅத் சகோதரர்கள் வெளிப் -படுத்துகின்ற பொறுமையும், அவர்கள் உறுதியுடன் நிலைத்திருப்பதும்) என்ற தலைப்பில் இந்த அமர்வின் மூன்றாவது சொற்பொழிவை ஸ்ரீநகர் மற்றும் ஜம்மு காஷ்மீரின் பொறுப்புப் பிரச்சாரகரான மதிப்பிற்குரிய மவ்லானா மக்சூது அஹ்மது பட்டி அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அவர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது இழைக்கப் -படுகின்ற அநீதிகளைப் பற்றிக் குறிப்பிட்டவாறு பல்வேறு சமயங்களில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் சகோதரர்கள் செய்துள்ள தியாகங்கள் பற்றியும், அவர்கள் காட்டிய பொறுமை மற்றும் உறுதியாக நிலைநிற்றலின் மகத்தான, ஈமானுக்கு எழுச்சியூட்டக்கூடிய சம்பவங்களைப் பற்றியும் தமது சொற்பொழிவில் கூறினார்கள். இதற்கு பிறகு மாநாட்டு தலைவரின் அனுமதியுடன் இந்த அமர்வு நிறைவடைந்தது.

**மூன்றாவது நாள் - இரண்டாவது அமர்வு**

மாநாட்டின் மூன்றாவது நாளின் இரண்டாவது அமர்வு இரண்டு கூட்டங்களைக் கொண்டதாக இருந்தது. முதல் கூட்டம் மதிப்பிற்குரிய மவ்லானா ஜலாலுத்தீன் சாஹிப் நய்யர் (சதர் அஞ்சுமன் காதியானின் தலைவர்) அவர்களின் தலைமையில் நடைபெற்றது. மதிப்பிற்குரிய உஸ்மான் பாஷா சாஹிப் அவர்கள் திருக்குர்ஆன் ஓதினார்கள். அவர்கள் சூரா ஆல இம்ரானின் 103 முதல் 106 வரையிலுள்ள வசனங்களை ஓதினார்கள். அதன் மொழியாக்கத்தை தலைமையக துணை நாஸிர் இஸ்லாஹோ இர்ஷாத் ஆன மதிப்பிற்குரிய தாஹிர் அஹ்மது சாஹிப் தாரிக் அவர்கள் படித்துக் காட்டினார்கள். ஜம்முவிலுள்ள ராஜூரைச் சார்ந்த மதிப்பிற்குரிய காமிரான் அஹ்மது சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கவிதையைப் பாடினார்கள்.

இதற்குப் பிறகு இந்தியாவின் பல்வேறு அரசியல் மற்றும் சமூகப் பிரமுகர்கள் தரப்பில் இருந்தும் ஆண்டு மாநாட்டிலிருந்து பலன் பெறுவது, அதன் முக்கியத்துவம் ஆகியவை தொடர்பாகவும், மாநாடு வெற்றிகரமாக நடந்தது தொடர்பாகவும் அனுப்பப்பட்டிருந்த வாழ்த்துச் செய்திகள் வாசிக்கப்பட்டது. இந்த வாழ்த்துச் செய்திகளை அனுப்பிய முக்கிய பிரமுகர்களில் இந்திய நாட்டின் ஜனாதிபதியான மாண்புமிகு பிரனாப் முகர்ஜி அவர்கள், இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் ஆகியோர் பட்டியலில் முதலிடத்தில் இருக்கின்றனர். இவர்களை தவிர கீழ்க்காணும் முக்கிய பிரமுகர்களும் கூட தமது வாழ்த்துச் செய்திகளை அனுப்பி தமது நல்ல விருப்பங்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

பதர்
வாரப் பத்திரிகை
காதியான்

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 23 February 2017 Issue No. 8

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com
**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/-

✯ இந்திய நாட்டின் முன்னாள் பிரதமர் மதிப்பிற்குரிய மன்மோகன் சிங் அவர்கள் ✯ இந்திய அரசின் இரயில்வே துறை அமைச்சரான மதிப்பிற்குரிய சுரேஷ் பிரபு அவர்கள் ✯ இந்திய அரசின் சிறுபான்மைத் துறை அமைச்சரான மதிப்பிற்குரிய முக்தார் அப்பாஸ் நக்வி அவர்கள் ✯ மதிப்பிற்குரிய குல்ராஜ் மஸர் அவர்கள் (Indian Union Cabinet Small and Minister of Micro Medium Enterprises) ✯ இந்திய அரசின் பாராளுமன்ற விவகார அமைச்சர் மதிப்பிற்குரிய அனந்த் குமார் அவர்கள் ✯ பாரதீய ஜனதா கட்சியின் பொதுச்செயலாளரான மதிப்பிற்குரிய ராஜீவ் பிரதாப் ரோடி அவர்கள் ✯ மத்திய அரசின் உள்துறை அமைச்சரான மதிப்பிற்குரிய கிரண் ரஜிஹோ அவர்கள் ✯ மத்திய அரசின் சட்டத்துறை மற்றும் நீதித்துறை அமைச்சரான மதிப்பிற்குரிய சதானந்த கவ்டா அவர்கள் ✯ மத்திய அரசின் பாதுகாப்புத் துறை அமைச்சரான மதிப்பிற்குரிய மனோஹர் பாரேக்கர் அவர்கள் ✯ இந்திய அரசின் ஜனாதிபதியான மாண்புமிகு பிரனாப் முகர்ஜி அவர்களின் புதல்வரான அபீஜீத் முகர்ஜி அவர்கள் (இவர்கள் பாராளுமன்றத்தின் உறுப்பினர் ஆவார்கள்).

தென்னிந்தியாவிற்கான கூடுதல் நாஸிர் அ∴லாவான மதிப்பிற்குரிய ஷிராஸ் அஹ்மது சாஹிப் அவர்கள் மேற்கண்ட பிரமுகர்களின் வாழ்த்துச் செய்திகளைப் படித்துக் காட்டினார்கள். இதற்கு பிறகு சத்ர் அஞ்சுமன் காதியானின் நாஸிர் அ∴லாவான மதிப்பிற்குரிய மவ்லானா முஹம்மது இனாம் கோரி சாஹிப் அவர்கள் மாநாடு எல்லா வகையிலும் அருளுக்கு உரியதாக அமைந்ததற்கு அல்லாஹ்விடம் தனது நன்றியைத் தெரிவித்தவாறு இந்த மாநாடு வெற்றிகரமாக நடந்ததற்காக நமது அன்பான இமாம் ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் அய்யத்தஹுல்லாஹுத் -தலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுக்கும் குறிப்பாக நன்றி தெரிவித்தார்கள். மேலும், மாநாட்டின் அமைப்பிற்கும் மாநாட்டில் கலந்து கொண்டவர் -களுக்கும், மாநாட்டின் வெற்றிக்காக முயற்சி செய்து வந்த கலப்பற்ற தூய உள்ளம் கொண்ட எல்லா அஹ்மதி சகோதரர்களுக்கும் அவர்கள் நன்றி தெரிவித்தார்கள். மாநாட்டுத் தலைவரின் சிற்றுரைக்குப் பிறகு துஆவுடன் இந்த முதல் கூட்டம் தனது நிறைவை எட்டியது.

இதற்குப் பிறகு மேடையிலும் மாநாட்டுத் திடலில் இருந்த அனைவரும் தத்தமது இடங்களிலேயே அமர்ந்திருந்தனர். காதியான் ஆண்டு மாநாட்டிற்காக முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யா (M.T.A) மூலமாக நேரடியாக ஒளிப்பரப்பாகும் தங்களது அன்பிற்குரிய இமாம் அவர்களின் சொற்பொழிவைக் கேட்பதற்காக அவர்கள் அனைவரும் ஆவலுடன் அமர்ந்திருந்தனர். ஹுஸூர் அவர்கள் உரை நிகழ்த்தியபோது மாநாட்டுத் திடல் முழுவதும் பார்வையாளர்களால் நிரம்பியிருந்தது. ஹுஸூர் அவர்களது சொற்பொழிவுக்கு முன்னதாக முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யா இன்டெர்நேசனல் தரப்பிலிருந்து ஒரு சிறப்பு நிகழ்ச்சி ஒளிப்பரப்பப்பட்டது. அதில் M.T.A இந்தியா சார்பாக தயாரிக்கப்பட்ட மாநாட்டின் அனைத்து நிகழ்ச்சிகளின் சுருக்கமான துணுக்குகளின் காட்சியும், காதியான் ஆண்டு மாநாட்டின் இரவுகளும் பகல்களும் எவ்வாறு ஆன்மீக சூழலில் இருந்தன என்பதை விளக்குகின்ற காட்சிகளும் மிகவும் சிறப்பாக ஒளிபரப்பப்பட்டது.

இதற்கு பிறகு M.T.A-ல் LIVE Programme (நேரலை நிகழ்ச்சி) ஆரம்பமானது. ஹுஸூர் அவர்கள் பைத்துல் ∴புதூஹ் பள்ளிவாயிலிலுள்ள தாஹிர் ஹாலில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் வந்து அமர்ந்தார்கள். இலண்டனிலும் ஐயாயிரத்திற்கும் அதிகமான பார்வையாளர்கள் ஹுஸூர் அவர்களின் சொற்பொழிவைக் கேட்பதற்காக காத்திருந்தனர். நிகழ்ச்சிகள் ஆரம்பமானது. மதிப்பிற்குரிய ஹா∴பிஸ் ஸ∴பருல்லாஹ் சாஹிப் அவர்கள் திருக்குர்ஆன் ஓதினார்கள். அவர்கள் சூரா அந்நூரின் 55 முதல் 57 வரையுள்ள வசனங்களை ஓதி அதன் மொழியாக்கத்தையும் படித்தார்கள். இதற்குப் பிறகு ∴பார்ஸி மொழியில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எழுதியிருந்த கவிதையை மதிப்பிற்குரிய ஸய்யிது ஆஷிக் ஹுஸைன் சாஹிப் அவர்கள் பாடினார்கள். பிறகு அதன் மொழியாக்கத்தையும் படித்துக் காட்டினார்கள்.

அதற்கு பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உருது கவிதையிலிருந்து சில வரிகளை மதிப்பிற்குரிய முர்தஸா மன்னான் சாஹிப் அவர்கள் அழகிய குரலில் பாடினார்கள்.

ஹுஸூர் அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்துவதற்காக எழுந்து நின்றதுமே காதியானிலுள்ள மாநாட்டுத் திடலிலிருந்தும் இலண்டனில் இருந்தும் எழுப்பப்பட்ட தக்பீர் முழுக்கங்கள் விண்ணை எட்டியது.

(தொடரும்....)

*(குத்பா தொடர்ச்சி...)*

மனிதராகுங்கள். எல்லா வகையான தீமையிலிருந்தும் தப்பித்துக் கொள்ளுங்கள். மல்∴பூஸாத் தொகுதி 9 பக்கம் 145-146; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) அல்லாஹ் நம்மை தொழுகையைப் பாதுகாப்பதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! அதை முறையாகப் பேணுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! நமது தொழுகைகளை கலப்பற்ற முறையில் அவனது திருப்திக்காக நிறைவேற்றும் நல்வாய்ப்பை வழங்குவானாக! நமது தொழுகையில் இன்பமும் ரசனையும் உருவாகட்டுமாக! எப்போதும் அதில் நாம் சோம்பல் காட்டாதவர்களாக இருப்போமாக! இன்று உலகின் ஆபத்துகள் மற்றும் துன்பங்களிலிருந்து நாம் அல்லாஹ்வின் அடிமைத்தனத்தின் கடமையை நிறைவேற்றுவதன் மூலமாக ஈடேற்றம் பெற முடியும் என்ற உண்மையை நாம் புரிவோமாக! அல்லாஹ் இதற்கு நமக்கு வாய்ப்பினை வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

*அது ஆதரமாகத் திகழ முடியாது என்பது வெளிப்படையானதாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இட்டுக்கட்டி பொய் கூறினால் அவர்கள் அழிக்கப்படுவார்கள். மேலும் எல்லா பணிகளும் சீர்குலைந்து விடும். ஆனால், வேறு எவராவது இட்டுக்கட்டி பொய் கூறினால் இறைவன் அவன் மீது வெறுப்படைய மாட்டான். மாறாக, அவனை நேசிப்பான். அவனுக்கு பெருமானார் (ஸல்) அவர்களை விட அதிகமாக கால அவகாசத்தை வழங்குவான். அவனுக்கு உதவி செய்வான் என்ற இவ்விஷயம் கூட ஓர் ஆதாரமாக இருக்க முடியுமா ? இதற்கு ஆதாரம் என்று பெயர் வைக்கக் கூடாது. மாறாக, இது ஒரு வாதம் மட்டுமேயாகும். அந்த வாதம் சுயமே ஆதாரத்தின் தேவை உடையதாகவே இருக்கின்றது. என்னை எதிர்ப்பதில் இவர்கள் எதுவரை சென்று விட்டனர் என்றால் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களது உண்மைக்கான அடையாளங்கள் மீதும் தாக்குதல் தொடுக்க ஆரம்பித்து விட்டனர். எனக்கு வஹி மற்றும் இல்ஹாம் வருகின்றது என்று நான் வாதம் செய்து 25 வருடங்களுக்கும் அதிகமாக ஆகி விட்டது இவர்களுக்கு தெரியும். அது பெருமானார் (ஸல்) அவர்கள் நபியாக அனுப்பப்பட்ட காலக்கட்டத்தை விட அதிகமாகும். ஏனென்றால் அது 23 வருட காலக்கட்டமாகும். மேலும், இது ஏறக்குறைய 30 வருட காலக்கட்டமாகும். இறைவனது அறிவில் எதுவரை எனது வாதத்தின் நாட்களின் தொடர் நீடிக்கும் என்பது இப்போது எனக்கு தெரியவில்லை. எனவேதான் இம்மக்கள் மவ்லவி என்று அழைக்கப்படுபவர்களாக இருந்தும் கூட இறைவன் மீது இட்டுக்கட்டி பொய் கூறுபவரும் இறை அறிவிப்பை பெற்றவர் என்று தன்னைப் பற்றி பொய்யாக கூறுபவரும் கூட இட்டுக்கட்டி பொய் கூற ஆரம்பித்த நாளிலிருந்து 30 வருடங்கள் வரை கூட உயிருடன் இருக்க முடியும். இறைவன் அவருக்கு ஆதரவளித்து அவருக்கு உதவி செய்ய முடியும் என்று கூறுகின்றனர். ஆனால், என்னைப் போன்றே இட்டுக்கட்டி பொய் கூறியுள்ள இன்னொருவருக்கும் இறைவன் ஆதரவளித்துள்ளான் என்று இதற்கு இணையான ஒரு சான்றை அவர்கள் எடுத்துக் காட்டவில்லை.*

*வரம்புமீறி செயல்படும் மக்களே ! பொய் பேசுவதும் அசுத்தத்தை உண்பதும் ஒன்றுதான். இறைவன் தனது கருணையுடனும் பரிவுடனும் என்னுடன் நடந்து கொண்டான். எதுவரையென்றால் இந்த நீண்ட காலத்தின் ஒவ்வொரு நாளும் எனக்காக முன்னேற்றத்தின் நாட்களாக இருந்தன.☆ என்னை அழிப்பதற்காக என் மீது தொடுக்கப்பட்ட ஒவ்வொரு வழக்கிலும் எதிரிகளை இறைவன் இழிவடையச் செய்தான். இதற்கு இணையாக இந்த அளவு காலக்கட்டமும் இறை உதவியும் ஆதரவும் உங்களுக்கும் கிடைத் -திருக்கிறதென்றால் அதை எடுத்துக் காட்டுங்கள்.*

*அது அல்லாமல் لَوْ تَقَوَّلَ عَلَيْنَا என்ற வசனத்திற்கேற்ப இந்த அடையாளமும் கூட நிரூபிக்கப்பட்டு விட்டது. உங்களிடம் இது தொடர்பாக கேள்வி கேட்கப்படும்.*

*(ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22 பக்கம் 213-215)*

☆ இதை நினைவில் கொள்ளுங்கள். எனக்கு இல்ஹாம் இறங்கிய காலத்தை பராஹீனே அஹ்மதிய்யாவின் முதல் பாகம் எழுதப்பட்ட நாளிலிருந்து கணக்கிடுவதாக இருந்தால் அந்த வருடத்திலிருந்து எனக்கு இல்ஹாம் இறங்கிய காலம் ஏறக்குறைய 27 வருடங்கள் ஆகும். பராஹீனே அஹ்மதிய்யாவின் நான்காவது பகுதி எழுதப்பட்டதிலிருந்து கணக்கிடுவதாக இருந்தால் அதிலிருந்து இப்போது வரை 25 வருடங்கள் கழிந்து விட்டன. எனக்கு முதல் இல்ஹாம் வர ஆரம்பித்த நாளிலிருந்து இந்த காலக்கட்டத்தைக் கணக்கிடுவதாக இருந்தால் அதிலிருந்து இப்போது வரை 30 வருடங்கள் ஆகின்றன.

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad